விலை: 60.00

பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk

Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 339 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை (23.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



மகாராஜா பொதிகள் சேவை

இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.2100/=
ஜெர்மனி - Rs.1950/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2100/= இத்தாலி - Rs.2250/=

11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்

நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்

GTV Express (5481)

www.gtve.com | 011 4 654 444

இல.25, கந்தசாமி கோவில் சாலை, வவுனியா
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## உயிரிழந்தவர்களை நினைவேந்துவது மக்களின் ஜனநாயக உரிமை

### கிளிநொச்சியில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கிளிநொச்சி)

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவேந்துவது பொது மக்களின் ஜனநாயகக் கடமை எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க

மாவீரர்களது கனவை

## நனவாக்கும் வகையில் அரசியல் தீர்வு வேண்டும்

### எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை

(முல்லைத்தீவு)

இந்த நாட்டில் அனைவரும் சமம் என ஜனாதிபதி சொல்வது உண்மையாக இருக்குமாக இருந்தால் எமது மாவீரர்களது கனவை நனவாக்குகின்ற வகையில் அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என இலங்கைத் தமிழரசு

03ஆம் பக்கம் பார்க்க

# நல்லிணக்கத்தை உருவாக்க ஒத்துழைப்புத் தாருங்கள்

## தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி அநுர கோரிக்கை



நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை முன்வைத்துள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு

### அடிக்கல் நாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புதிய உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு பழைய பூங்காவில் நடை

23ஆம் பக்கம் பார்க்க

## மழையுடனான காலநிலை வடக்கில் தொடரும்

(யாழ்ப்பாணம்)

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் பதிவாகி வரும் கன மழை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடிக்கும் என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேரா

23ஆம் பக்கம் பார்க்க

## கண்டியில் மண் சரிவு 6 பேர் உயிரிழப்பு



23ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் விசேட சோதனை

### 611 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்

23ஆம் பக்கம் பார்க்க

## யாழில் அட்டைப் பண்ணைக்கு காவலுக்குச் சென்ற இளைஞன்

### நீரில் மூழ்கி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் கடலில் அட்டைப் பண்ணைக்குக் காவலுக்குச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இதில் இளவாலை - தும்பளை பகுதியைச் சேர்ந்த ஜோன்ஸன் ஸ்ரீபன் மதிவாணன் (வயது-18) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் - குருநகர்

23ஆம் பக்கம் பார்க்க






நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபமாங்கல்யம் திருமண சேவை

உங்களது எதிர்பார்ப்புகளுக்கேற்ப பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை எம் திருமண சேவையினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு

076 387 7425

Palaly Road, Thirunelveli.

www.subamangalyam.com

(6004)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 In IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970

(5645)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-

குறைந்த விலை -நிறைந்த சேவை

கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்

14 நாட்களில் Delivery (C-4397)

UK 11Kg - 1420/- France 11Kg - 2170/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## பொதுத் தகவல் தொழில்நுட்பவியல்

## A/L GIT 2025

இறுதிக் கருத்தரங்கு - 29,30/11/2025 10 Am - 1 pm

- அலகு ரீதியான மீட்டல்
- அச்சடித்த பாடக் குறிப்புக்கள்
- இலவசக் கருத்தரங்கு

(6003)

IPS to your future Thirunelvely

TP : 076 685 2529, 077 570 4893

## Win repair

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகின்றோம்.

(5997)

076 834 6136

## வீடு வாடகைக்குண்டு

இலக்கம் 44, அரசடி வீதி, தட்டாதெரு யாழ்ப்பாணத்தில் நல்ல சூழலில் அமையப்பெற்ற மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. முழு வீடாகவோ, தனி அறைகளாகவோ வாடகைக்கு கொடுக்கப்படும். தனியார் நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வெளி மாவட்டத்தில் இருந்து தங்கியிருந்து வேலை செய்வோர் தொடர்பு கொள்ளவும்.

(5998)

க.கு.திவாகரன் -
Whatsapp : 00447304087541
சி.ஆரூரன் - 075 645 8817

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(6000)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரிலுள்ள விடுதியிலும் பண்ணையிலும் வேலையாட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(C-4396)

077 691 3440

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600

(5999)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127


# மரண அறிவித்தல்



## இராமநாதன் தெய்வேந்திரன்

வதிரியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் தெய்வேந்திரன் (இந்திரன்) அவர்கள் கடந்த (21.11.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகுருநாதன் (சிவகுரு மில்) மற்றும் தனலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும் வதனி (குஞ்சு) அவர்களின் அன்புக் கணவரும் தக்சாயினி, ஜனந்திகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமணி, காலஞ்சென்றவர்ளான தவமலர், தங்கராணி மற்றும் கணேசலிங்கம், சிவகுமார், காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தர்மலிங்கம், கிருஸ்ணராசா, மாணிக்கவாசகர், நக்கீரன், சுதாஸ்கரன் (சுதா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவரம் திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முல்லை,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
077 831 5965

(C-4394)

# மரண அறிவித்தல்

பிறப்பு 14 - 11 - 1996



இறப்பு 19 - 11 - 2025

## இராஜகுலேந்திரன் பிருந்தன்

தூதாவளை கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகுலேந்திரன் பிருந்தன் அவர்கள் கடந்த (19.11.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மரியாம்பிள்ளை லோட் இராஜகுலேந்திரன் - ராஜினி தம்பதியினரின் அன்பு மகனும் சத்தியமூர்த்தி (பிரான்ஸ்) -சசிகலா (பிரான்ஸ்) தம்பதியினரின் அன்பு மருமகனும் உசாலக்ஷி(லக்ஷி) அவரின் பாசமிகு கணவரும் பிரவீன் (பிரான்ஸ்), தனுசன், டிக்ஷனா (சுவிஸ்), கிரிஷனா (ஜேர்மனி), டிலுசனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கெவின் (சுவிஸ்), கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனனும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை லோட் - ஜெயம், நடராஜன்(சுவிஸ்) - அற்புதமலர் (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2025) திங்கட் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தூதாவளை,
கரணவாய்,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
077 263 0313

(6002)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் குற்றச்சாட்டு ஐவருக்கான மரண தண்டனை உறுதி!

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டில் 151 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து நபர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உறுதி செய்துள்ளது.

அந்த காலப்பகுதியில், இலங்கை கடற்படையால் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய போதைப்பொருள் தொகையாக, இது கருதப்பட்டது.

இந்த குற்றத்துக்கான மரண தண்டனை, 2023, செப்ரெம்பர் 27, அன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லேயால் வழங்கப்பட்டது.

குற்றப்பத்திரிகையில் உள்ள மூன்று குற்றச்சாட்டுகளிலும் ஐந்து குற்றவாளிகளும் குற்றவாளிகள் என்று மேல் நீதிமன்றம் கண்டறிந்து, ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் மரண தண்டனை விதித்தது.

நீர்கொழும்பு, கட்டுவாவை சேர்ந்த ஐந்து பேரே இந்த தண்டனைக்கு உள்ளானவர்களாவர்.

இந்த நிலையில், மேல் நீதிமன்றத்தின் கண்டு பிடிப்புகள் அல்லது விதிக்கப்பட்ட தண்டனையில் தலையிட எந்த அடிப்படையும் இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (நி)

# இலங்கையில் பாதுகாப்பில்லையாம் அவுஸ்திரேலிய அரசாங்கம் எச்சரிக்கை

(கன்பெரா)

இலங்கைக்கு வருகை தரும் மற்றும் இலங்கையில் தங்கியுள்ள அவுஸ்திரேலியர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையில், பொது மக்களின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பாதுகாப்பு அபாயங்கள் காரணமாக அவுஸ்திரேலியர்கள் இலங்கையில் அதிக அளவு எச்சரிக்கையுடன் இருக்குமாறு அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

அத்துடன், ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர்க்குமாறும், உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றுமாறும், புதுப்பிப்புகளுக்கு ஊடகங்களைக் கண்காணிக்குமாறும் அவுஸ்திரேலியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# குழந்தைப் பருவ கல்வியில் புதிய முயற்சி செயற்பாட்டுக்கு வரும் கல்வி சீர்திருத்தம்

(கொழும்பு)

குழந்தைகளுக்கு தரப்படுத்தப்பட்ட ஆரம்பகால கல்வியை வழங்கும் நோக்கில், 2027 ஆம் ஆண்டு முதல் புதிய முன்பிள்ளைப் பருவ கல்வி பாடத்திட்டம் செயற்படுத்தப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆசிரியர் பயிற்சித் திட்டம் அடுத்த ஆண்டு முதல் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆரம்பகால குழந்தைப் பருவ மேம்பாடு மற்றும் தொடக்கக் கல்வித் துறையால் தயாரிக்கப்பட்ட ஆரம்பகால குழந்தைப் பருவ கல்வி பாடத்திட்டத் திறான தேசிய கொள்கைக் கட்டமைப்பின் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரி வித்தார்.



இந்த நிகழ்வில், ஆரம்பகால குழந்தைப் பருவத்திற்கான பாடத் திட்டகட்டமைப்பைக் காண்பிக்கும் தேசிய கல்வி நிறுவனத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமும் ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நல்லிணக்க...

இந்த ஆண்டு டிசம்பரில் நடைபெறவிருக்கும் இலங்கை தினத்திற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தல் மற்றும் கருத்துகள், பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்துச் சமூகங்களையும் ஒன்றிணைத்து "இலங்கை தினம்" கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து இலங்கை தினக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்படுகின்றமை, இதில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் பிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்டதுடன் இது தொடர்பாக தமது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ் அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் போதைப்பொருள் அச்சுறுத்தலைத் தோற்கடிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாடு மற்றும் நாட்டில் தேசிய மற்றும் மத ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு நிபந்தனையின்றி தாம் ஆதரவளிப்பதாகவும் பிரதிநிதிகள் இதன் போது வலியுறுத்தினர்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாடு குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அரசியல், மத மற்றும் கலாசார பன்முகத்தன்மைக்கு அப்பால் அனைவரும் ஒரு பொதுவான தளத்தில் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சிகளையும் செயற்திட்டங்களையும் உருவாக்குமாறு ஏற்பாட்டுக் குழுவிற்கு ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி மனோகணேசன் மற்றும் பழனி திகாம்பரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப் படுத்தி ரிஷாத் பதியுதீன், இலங்கை முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப் படுத்தி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா, இலங்கை தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி காதர் மஸ்தான், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி செல்வம் அடைக்கலநாதன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளைய தம்பி ஸ்ரீநாத், கவிந்தரன் கோடீஸ்வரன், டி.ரவிஹரன் மற்றும் சுயாதீனக் குழுவின் இராமநாதன் அர்ச்சுனா உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ம-7)

## நனவாக்கும்...

கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் நேற்று நடைபெற்ற மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளித்தல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியை எங்கள் கட்சி சந்தித்துப் பேசிய போது ஒரு மணித்தியாலம் அரசியல் தீர்வு குறித்து பேசினோம். 70 வருடங்களாக வெவ்வேறு வடிவத்திலான போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

உலகத்தில் எந்தச் சமூகமும் எந்த மக்களும் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழமாட்டார்கள். அதனை ஏற்கவும் மாட்டார்கள். அப்படியிருக்க ஒரு ஜனநாயகக் கட்டமைப்பில் ஒரு மக்கள் எண்ணிக்கையில் 3 மடங்காக இருக்கின்றபோது எண்ணிக்கையில் குறைந்ததாகக் காணப்படும் சமூகம் எப்படி சம அந்தஸ்து உடையவர்களாக வாழ முடியும்?

ஏனெனில் வாக்கெடுப்பு நடத்தினால் அது ஒரு பக்கமாகச் சாய்ந்துதான் நிற்கும். அதனால் தான் அதிகாரப் பகிர்வைக் கோருகின்றோம்.

நாட்டில் நாங்கள் பெரும்பான்மையாக வாழாவிட்டாலும் நாம் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் எங்களுக்கான அரச அங்கீகாரங்களைப் பகிர்ந்து கொடுங்கள் எனக் கேட்பதன் தார்ப்பரியம், நியாயப்பாடு அதுதான்.

இது செய்யப்பட வேண்டும். எவர் நிமித்தம் செய்யப்படாது விட்டாலும் மடிந்து போன எங்களுடைய மாவீரர்களது தியாகத்தின் நிமித்தமாக அது செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.(ம-7)


கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 16.12.1952
மறைவு 21.11.2025

அமரர் இராஜரட்ணம் பரமேஸ்வரராணி(ராணி)

நிஜம் இன்றி நிழலில்லை - என்பது
பொய்த்துவிடும் படியாய் - உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மூணாமலை வீதி,
சுதுமலை,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.



திருவண்ணாமலை
ஈழத்து சித்தர்களின் வழிபாட்டு மையத்தில்
திருக்கார்த்திகை தினத்தில்
அன்னதானம் வழங்கல்

திருவண்ணாமலையில் ஈழத்து சித்தர்களான செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், சுப்பிரமுனிய சுவாமிகள் (கவாய்) படங்கள் வைக்கப்பட்டு கடந்த 03.03.2025 தொடக்கம் யோகர்சுவாமி திருவடி பேறடைந்த அச்சுவினி நட்சத்திரத்தில் திருவாசக முற்றோதல் நற்சிந்தனை ஓதலுடன் சாதுக்களிற்கு அன்னதானம் வழங்கலும் மாதந்தோறும் சைவப்பிரகாச பேரவை ஏற்பாட்டில் நடந்து வருவது அண்ணாமலையானின் திருவருள்ளன்றோ. பல இலட்சக்கணக்கான அடியார்கள் கூடும் கிரிவலத்தில் திருக்கார்த்திகை தினத்தன்று 03.12.2025 புதன்கிழமை இலங்கை மக்கள் சார்பாக அன்னதானம் வழங்குவது பெரும் புண்ணியமான செயற்பாடாகும். இந்த அன்னதானத்தில் பங்குகொள்ள விரும்புவோர் கீழ் உள்ள தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சைவப்பிரகாச பேரவை
0773901877
0773783316

(C-4395)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம் நடத்திய 'மானுடம்' இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம் பெற்றது.'எல்லைகளுக்கு அப்பால் வரலாற்றுச் சமரசங்கள் பண்பாட்டு மோதல்கள் மற்றும் உலகளாவிய கலப்பொற்றுப் பிராந்தியங்கள் மீதான பயணம்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்-சிவசாந்தன்)



வடமராட்சி இன்பர் சிட்டி கடற்கரை பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி. கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 26 ஆவது ஆண்டு நினைவு நாளும் மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தில் கல்வி கற்று வந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனது 21 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை வடமராட்சி இன்பர் சிட்டி கடற்கரையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.
(படம் -மகாலிங்கம்)



கியூமெடிக்கா நிறுவனத்தினால் நெடுந்தீவு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு அதன் விபரங்களை உள்ளடக்கிய நூல் வெளியீட்டு நிகழ்வு கியூமெடிக்கா சர்வதேச பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜொகானஸ் பீட்டர் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படம் -சிவசாந்தன்)





மீசாலை மேற்கு வீனஸ் சனசமூக நிலையத்தின் சிறுவர் மகிழ்களம் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி அன்று மாலை வீனஸ் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)





யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் வேலணை பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய நடமாடும் சேவையானது வேலணை பிரதேச செயலாளர் தன பாலசிங்கம் அகிலன் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் நடைபெற்றது.இந் நிகழ்வு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கைலா சபிள்ளை சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன், உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது.



மாவீரர் நாளை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினரின் பங்கேற்பில் சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்க பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இரத்ததான நிகழ்வில் 33 பேர் பங்கேற்று குருதிக் கொடை வழங்கியிருந்தனர். (படம்- மகாலிங்கம்)



யாழ்.வடமராட்சி கிழக்கு குடத்தனை வலிக்கண்டி கிராமத்தில் புளூஸ் அறக்கட்டளை மற்றும் புளூஸ் விளையாட்டு கழகத்தினரின் நிதிப்பங்களிப்புடன் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மர நடுகை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)



உலக நீரழிவு தின விழிப்பூட்டல் செயலமர்வு கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.இந்த செயலமர்வின் போது நீரிழிவு நோய்,உயர் குருதி அமுக்கம்,கொலஸ்ட்ரால் போன்ற மூன்று புத்தகங்களை தமிழில் எழுதி வெளியிட்ட வைத்திய நிபுணர் செல்லத்துரை பிரசாத் யாழ் நீரிழிவு கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் வாடும் எம் உறவுகளை விடுவித்து நல்லிணக்க சைகையை காட்டுங்கள்

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

**ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் உட்பட ஒட்டு மொத்த ஈழத்தமிழினம் இன்னமும் வடுக்களோடு தான் வாழ்கிறோம். எங்களுக்கான ஆரோக்கியமான சமூக வாழ்வுக்கான கதவை உங்கள் அரசு எப்போது திறக்கப்போகிறது என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பினார்.**

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத்தீவிலே ஆயுதங்களை விரும்பி ஏற்ற இனமல்ல எங்கள் இனம். அரசியல் வழியில் போராடித் தோற்று ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

2009 உடன் ஆயுதமும் மௌனிக்கப்பட்டது. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே மாறிவரும் அரசுகள் முயல்வதாக அறிக்கைகள் காட்டுகின்றன. செய்திகளில் அரசுகளின் சார்பாளர்களாக நீங்கள் மாறி மாறி எங்களை ஏமாற்றுகிறீர்கள்.

இந்தத்தீவின் நல்லிணக்கத்துக்கான முதற்படியே எங்களுக்காக குரல்கொடுத்து இப்போதும் சிறையில் வாடும் எங்களின் உறவுகளின் விடுதலைதான். தயவுசெய்து எங்கள் உறவுகளை விடுவித்து நல்லிணக்கச் சைகையை காட்டுங்கள்.

ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு இந்த அரசின் 2026 இன் வரவு செலவுத்திட்டம் என்ன ஆற்றுப்படுத்தலை வழங்கப்போகிறது.

அந்தப்பிள்ளைகள் இந்த இனவாத மண்ணில் பிறந்ததை விட வேறென்ன தவறு செய்தன.

உங்கள் வரவு - செலவுத்திட்டம் முன்மொழியும் ஆரோக்கிய வாழ்வுக்கான வழியை ஈழத்தமிழர்களுக்கும் திறந்துவிடுங்கள் என அவர் தெரிவித்தார். (நி)

### சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 20 இலட்சத்து 23 ஆயிரத்து 470 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 454,959 ஆகும். (நி)


கண்ணீர் அஞ்சலி

தோற்றம் - 26.07.1959

மறைவு - 18.11.2025



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
ஆங்கிலத்துறை விரிவுரையாளர்
டிலக்ஷா சண்முகராசா
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
சண்முகராசா யோகராணி

அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4392)

பிரிவில் துயர் கொள்ளும் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.



2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுந்தரம் திருநாவுக்கரசு



அப்பா என்று வாய் நிறைய
நான் கூப்பிடுவேன் இனி
யாரைக் கூப்பிடுவது
வழிகாட்டி சென்று விட்டீர்கள்
அப்பா என்னை நல்ல
வீட்டுத்தலைவனாக
மாற்றி விட்டு போனீர்கள்
எனது பிள்ளைகள் தாத்தா
என்றும் வர மாட்டாரா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு: மகன் ஜெயா
077 533 5059, 077 425 3573

தோற்றம் 19.12.1941
மறைவு 28.11.2023



35 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



யாழ்.மாவட்ட
சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும்
இணைப்பதிகாரியும் யாழ். மாவட்ட
சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவு சங்கங்களின் சமாச
முன்னாள் தலைவரும்,
ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு
அபிவிருத்தி உதவி ஆணையாளர்

அமரர்
சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்களின் சேவையினை நன்றியுடன்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

(5985)

தோற்றம் 06.10.1927
மறைவு 23.11.1990

276, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
யாழ்.மாவட்ட சமூக
[illegible]



நீங்கா நினைவுகளில் முப்பது ஆண்டுகள்





அமரர்.
கனகசபை சண்முகசுந்தரம்
(சோமு)
(ஸ்தாபகர்-சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)
பிறப்பு: 03.11.1941

அமரர்.
சண்முகசுந்தரம் சிவரூபன்
(டியூக்கோ)
(மாணவன்-யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)
பிறப்பு: 18.08.1983

மறைவு
23.11.1995

கப்பலாய் எங்களை கரைசேர்த்த உங்களை
இப்பவும் நினைக்கிறோம் இதயத்தால் மறவாது
தப்பாது ஆண்டுகள் முப்பது முடிந்தாலும்
எப்போதும் நீங்கள் எம்மனதில் இருப்பீர்கள்

(1723)

'துர்க்கா இல்லம்'
இல.29, ஓட்டுமடம் வீதி,
ஓட்டுமடம், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் 1 முதல் 6 வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

**டிசம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.**



யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாடு ஓரளவு சீராகவுள்ளதாகவும், ஆனால் இவ்வருடம் இற்றை வரை ஆயிரத்து 27 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியான டெங்கு நோய் கட்டுப்பாட்டு கண்காணிப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

மேலும், திண்மக்கழிவ கற்றல் தொடர்பாக கழிவுகளை தரம் பிரித்து வழங்குதல் தொடர்பாக கழிவு முகாமைத்துவம் அவசியம் குறித்தும், அரச திணைக்களங்களால் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து வழங்கப்படுவது குறித்து உறுதிப்படுத்தல்கள் அவசியம் குறித்தும், பாடசாலையில் மாணவர்களுக்கு இது தொடர்பாக பழக்கவழக்கம் தேவை எனவும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் விழிப்புணர்வை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும், டிசம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்துவதாவும், பிரதேச செயலாளர்கள் தமது பிரிவிற்குரிய தவிசாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து, கிராமங்களை கொத்தணி ரீதியாக பிரித்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களையும் ஈடுபடுத்தி வீடுகள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் களத்தரிசிப்புக்கள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், திண்மக் கழிவ கற்றலில் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவதை உறுதிப் படுத்துமாறும் தெரிவித்தார். (8)



யாழ் மத்திய கல்லூரியின் உயர்தரம் 1991 ஆம் ஆண்டு அணியால் செல்மின் எனும் பெயரிலான சமூக சேவைகள் அமைப்பால் பலவிதமான நற்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மிக அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சின்னக் காலப்போட்டமடு கிராமத்தின் பாடசாலையில் குழாய்க் கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

# குடத்தனையில் பனம்விதை நடுகை



(கரணவாய்)

வடக்கு மாகாண சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு "பனம் விதை நடுகை" யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு கிராமத்தில் சூழலியல் ஆர்வலர் சோதிலிங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில், குடத்தனை வடக்கு இளைஞர்கள், வடமராட்சிகிழக்குபிரதேச தலைமை கிராம அலுவலர் செப-மாலை தோமஸ் யூட், குடத்தனை வடக்கிற்கு பொறுப்பான மருதங்கேணிபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, கிராம மக்கள் எனப்பலர் கலந்து கொண்டு பனை விதைகளை நாட்டிவைத்தனர். (8-60)

# சட்டவிரோத மீன்பிடியை நிறுத்துங்கள்!

## முல்லையில் விழிப்புணர்வு நடைபவனி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கடற்கரையில் சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு "சர்வதேச மீன்பிடியை ஒழித்து எமது உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று இடம்பெற்றது.





சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட கரையோர இளைஞர்கள் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய இந்நடைபவனியில், கடல்சார் வளங்களை பாதுகாக்கவும், உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவும் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் சட்டவிரோத மீன்பிடியை இலங்கை அரசாங்கம் முற்றுமுழுதாக தடை செய்ய வேண்டும், முல்லைத்தீவின் இளம் மீனவர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலம் வேண்டும், முல்லைத்தீவு கடற்கரையை காக்க சட்டவிரோத மீன்பிடியை நிறுத்தவும், கடலை பாதுகாப்போம் சட்டவிரோதத்தை தடுப்போம், எங்கள் பாரம்பரிய கடலில் உங்கள் சட்டவிரோத படகுகள் வேண்டாம் போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு நடைபவனியில் கலந்து கொண்டிருந்தனர்.

நடைபவனியின் நிறைவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், தயாரிக்கப்பட்ட மகஜர் ஊடகங்களுக்கு வாசித்து விளக்கப்பட்டதுடன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கான மகஜரினை மாவட்ட செயலக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரிடம் அதிகாரபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நடைபவனியில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் இணைப்பாளர்களான மதுசனா, சயந்தன் மற்றும் உத்தியோகத்தர்கள் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சி.பிரதாஷ், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் இன்று

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் 62 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 1:00 மணி வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதி இலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப் புலவர், க. கமலநாதன் தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி நிகழ்வானது, தவத்திரு வேலன் சுவாமிகள், சிவஸ்ரீ ச. சோமஸ்கந்த குருக்கள், சிவ ஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ கைலாசநாத குருக்கள் ஆகியோரின் அருளாசிகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடம் மற்றும் சமஸ்கிருதத் துறைத் தலைவர், சிவஸ்ரீ பால கைலாசநாதக் குருக்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர், செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், சித்த மருத்துவர் கணேசலிங்கநாதன், சிவத்திரு மணிவண்ணன் ஐயா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வரணி வடக்குக் கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த க. இராசையா, வே. இரகுநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் விழாவில் 2024 ஆம் ஆண்டுத் தேர்வில் சித்தி பெற்ற சைவப் புலவர்கள் மற்றும் இளஞ்சைவப் புலவர்களுக்கான கௌரவிப்பு, 62ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கான பரிசில் வழங்குதல், கதாப்பிரசங்கப் போட்டி, சொற்பொழிவு உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 520
23.11.2025
பக்கம் 07

# இனவாதம் முடிந்துவிட்டது! இனி மதவாதம்?

கடந்த 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை பிரட்ரிக்கோட்டை உச்வே கடற்கரையோரமாக அமைந்துள்ள ஸ்ரீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரைக்கு அருகில் புத்தர் சிலை ஒன்று இரவோடு இரவாக வைக்கப்பட்டது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். பல இடங்களில் நடக்க வேண்டிய சம்பவம், ஒரு இடத்தில் நடந்தது ஆச்சரியமாக உள்ளது.



**காரணம்:** 21.11.2025 அன்று நடக்க, இருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஒழுங்குபடுத்தியவர்களுக்கு, ஆட்களை சேர்ப்பதற்கும், ஆட்சியைக் கலைப்பதற்கும், இருக்கும் ஒரே ஆயுதம் மதவாதம்தான். இனவாதத்தை வைத்து அரசியல் நடத்தி முடிந்தாகிவிட்டது. இனி மதவாதம்தான். மிகவும் வலிமையானதும், ஆபத்தானதும் இந்த மதவாதம்தான்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியே புத்தர் சிலையை அகற்றும்படி கூறி; சிலை அகற்றப்பட்ட பின்னர், குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்குள் புத்தர் சிலையை அதே இடத்தில் வைக்கும்படி கட்டளையிடுகின்றார் என்றால் மதவாதம் என்பது எந்தளவிற்கு வலிமையானது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்று அதிகாரமுறைமையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர் ஜே. ஆர் ஜெயவர்த்தன. இந்த அதிகார முறைமையை அறிமுகப்படுத்திய பின் அவர் கூறினார். "இந்த நிறைவேற்று அதிகார முறைமையால், ஒரு ஆணைப் பெண்ணாக மாற்ற முடியாது. ஒரு பெண்ணை ஆணாக மாற்ற முடியாது. மற்றபடி இந்த அதிகாரத்தில் உள்ள ஜனாதிபதி எதை நினைக்கின்றாரோ, அதையெல்லாம் செய்ய முடியும் என்று.

சர்வதேச அரசியல் தலைவர்களின் செல்வாக்கு நீண்டகால அரசியல் அனுபவம் நீண்டகாலம் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் ரணில் விக்கிரசிங்கவை சிறையில் அடைத்த நிறைவேற்று அதிகாரத்தால் மதவாதத்திற்கு முன்னால் ஒருசில மணித்தியாலங்கள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தந்திரோபாய ரீதியில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அநுர அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை சரியானது என்றே கூறலாம்.

மேலும் நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினையை ஒப்படைத்திருப்பது மதவாதத் தீயை மேலெழும்ப விடாது சாதகமாக்கியது பாராட்டிற்குரியது. இப்போதுள்ள தொலைத் தொடர்பு ஊடக சாதனங்கள் மூலம் ஒரு விரல் புரட்சியால் மதவெறியைத் தூண்டி, மக்களை அணி திரட்டுவது மிகவும் சுலபம். இந்தியன் - 2 திரைப்படத்தில் கைத்தொலைபேசி மூலம் தகவல்களை அனுப்பி நடிகர் கமலஹாசனை மக்கள் கல்லெறிந்து, ஓட... ஓட... விரட்டுவது போன்ற காட்சி போல, நிஜமாகவே பல நாடுகளில் அண்மைக் காலமாக மக்கள் புரட்சி செய்து, பல நாடுகளில் அரசுகள் மாறியிருப்பது கண்கூடு.

"மாற்றம் ஒன்றே மாறாதது" மற்றபடி எல்லாவற்றையும் மாற்ற முடியும். உலகத்தையே சமநிலையாக்கம் செய்ய முடியும். ஆனால் உடனடியாக எல்லாவற்றையும் மாற்ற முடியாது. காரணம் பிரிவினை வாதங்கள்தான்

இந்த உலகத்தின் ஒரு வர்க்கத்தினர் பெரும் சொத்துக்களை குவித்து, சுக போக வாழ்க்கை வாழ்வதற்கு உதவி புரிகிறது. இலங்கையில் எழுபத்தைந்து வருடங்களுக்கு மேல், பிரிவினைவாதங்கள் மக்களுக்கு ஊட்டி ஊட்டி வளர்க்கப்பட்டிருக்கின்றது. அதிலும் மதவாதம் என்பது சகல இன மக்களின் நாடி, நரம்பு, இரத்தத்திலும் ஊறிப் போயிருக்கின்றது. இன்று உலகத்தில் நடக்கும் போர்களிலே அதிகமான போர்கள் மதத்தின் பெயரால் நடக்கின்றது என்பது தெட்டத் தெளிவான உண்மை.

இல்லை என்பதை இல்லாமல் செய்து, இந்த உலகத்தில் அமைதியை ஏற்படுத்த நினைத்தால், சமத்துவத்தை விரும்பும் மனித நேய சக்திகளுக்கு பல வருடங்கள் தேவைப் படும். அரச தலைவர்கள், மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள் போன்ற உயர் அரச தலைவர்களுக்கு ஒரு சில வருடங்கள் தேவைப்படும். ஆனால் சகல மதங்களின் உயர்பீடத்தை சேர்ந்தவர்களுக்கு அமைதியும் சமத்துவத்தையும் இந்த உலகத்தில் ஏற்படுத்த ஒருநாள் போதும் இவர்கள் மனம் வைப்பார்களா..?

ஆகவே தற்போதைய காலம், அரசியல், சூழல், சர்வதேச நிலைப்பாடு போன்ற காரணங்களை கவனத்தில் கொண்டு அதற்கு ஏற்றால்போல் முடிவுகள் எடுப்பதுதான் சிறந்தது.

பாலக்கட்டையூர்
T.R குமார்

# அரசுக்கு எதிரான பேரணியும் தமிழர் நில அபகரிப்பும்

எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக நுகேகொடையில் கடந்த வெள்ளிக்கிழமை எதிர்ப்புப் பேரணி ஒன்று நடந்திருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த பேரணி நிச்சயம் அரசாங்கத்தை வீழ்த்தும் என ஏற்ப்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

ஆயினும் குறித்த பேரணி தொடங்கிய சில மணி நேரங்களிலேயே அங்கு கூடியமக்கள் கலைந்து சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்ததுடன் குறித்த பேரணி இப்போது தேவையான ஒன்றா? எனும் வாதப் பிரதிவாதங்கள் சமூக வலைத்தளத்தில் அதிகமாய் பகிரப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதில் குறித்த பேரணி தேவையற்ற ஒன்று என்பதே அதிகம் பகிரப்பட்டதாகக் காணப்பட்டதுடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் போதைவஸ்துக்கு எதிராகவும் ஊழலுக்கு எதிராகவும் பாதாள உலகக் குழுக்களை அழிப்பதிலும் தீவிரம் காட்டும் நிலையில் எதிர்க்கட்சிகளின் இவ்வாறான எதிர்ப்புப் பேரணிகள் கோமாளித் தனமானவை என்றவாறான பதிவுகள் அதிகம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குற்றம் செய்தவர்களையும் அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை எடுக்கும்போது அதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களே அரசுக்கு எதிராகப் பேரணி செல்கின்றார்கள் என அரச ஆதரவாளர்கள் குறித்த பேரணியை விமர்சித்திருந்தனர்.

உண்மையில் இந்த நேரத்தில் அரசுக்கு எதிராக ஒரு பேரணி தேவையா எனின், அது இருக்கும் கொஞ்ச நஞ்ச மதிப்பையும் இல்லாது செய்யும் வேலை என்பதே உண்மை. அரசைக் கவிழ்க்கும் பேரணி என்ற கோசத்துடன் உருவாக்கப்பட்ட பேரணி ஆயிரக்கணக்கானவர்களுடன் நிறைவடைந்திருக்கிறது.

ஆயிரக்கணக்கானவர்கள் கூடினால் அரசை கவிழ்த்து விடலாமா என்ற விடயம் இங்கு கவனிக்கத்தக்கது. திருமலைப் புத்த விகாரை விடயத்தையும் குறித்த பேரணியையும் இணைத்துப் பார்க்க வேண்டியது தமிழ் மக்களுக்குத் தெளிவைத் தரும் என அரச ஆதரவாளர்கள் பலர் கூறியிருந்தனராயினும் தமிழ் மக்களின் பூர்வீகங்களைக் கபளீகரம் செய்யும் வழமையான பேரினவாத அரசாக இந்த அரசும் செயற்படுகிறது என தமிழ் மக்கள் எண்ண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கையின் அரசியலமைப்பு பௌத்தத்திற்கு முக்கியம் கொடுக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக யாரும் எதுவும் செய்யலாம் என்ற மனநிலையைக் களைந்துவிடாமல் இனவாதம் - மதவாதம் பேசினால் அது நாட்டின் நலனுக்கு நல்லதல்ல.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் தான் எடுத்து வந்த சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகளால் ஆலடியை அலங்கரித்தார்.

இந்த மண்ணின் விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்த ஏனையவர்களும் மலர் தூவி அஞ்சலித்தனர்.

விதானையார் விசுவலிங்கம் விம்மி விம்மி அழுதார். மாவீரரான தன் மகனை நினைந்து நினைந்து அவர் அழுத போது ஆலடி நிசப்தமாகியது.

ஓ! எத்தனை எத்தனை ஆயிரம் பிள்ளைகள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த இந்தத் தமிழ் மண், இன்று சுயநல அரசியலால் கந்தறுந்து கிடக்கிறது.

மாவீரர்களின் தியாகங்களை அர்த்தமற்ற தாக்குவது போல, அந்தத் தியாகங்களைத் தங்களின் சுயநல அரசியலுக்கான அடிக்கட்டுப் பசளையாகப் பயன்படுத்து வதை பார்க்கும் போது நெஞ்சு பொறுக்கவில்லை.

எதுவாயினும் எங்கள் பிள்ளைகளின் தியாகம்- அவர்களின் கனவு ஒரு போதும் வீண்போகாது. வாத்தியார் வைத்திலிங்கம் மெல்லியதாய் உரையாற்ற மாவீரர் நினைவேந்தலுடன் ஆலடியில் அனைவரும் அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். மிகச் சிறந்த நாடகக் கலைஞர் பெளராணிகர் கலாபூஷணம் பரராஜசிங்கம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் பரராஜசிங்கம் அவர்கள் நாடக் கலையை ஆழமாக நேசித்தவர்.



கலாபூஷணம்
பரராஜசிங்கம்

தமிழ் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். அகில இலங்கை இளங்கோ கழகத்தின் தமிழ்ப் பணி மேலோங்க மூல காரணமாக இருந்த அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியைச் சூழ்ந்து கொண்ட அமைதியைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலை நிறுவப்பட்ட சம்பவம் இந்த நாட்டில் கலவரத்தை ஏற்படுத்துவதற்காகத் திட்டப்பட்ட திட்டம், இது விடயத்தில நீதிமன்றம் தனது கடமையைச் செய்யும் என்ற நம்பிக்கை மக்களிட்ட இருக்குது.

**மூப்பர்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணியார்:-** திருகோணமலைக் கடற்கரையில ஒரு புத்தர் சிலையை இரவோடு இரவாக புத்த பிக்குகள் சேர்ந்து பிரதிஷ்டை செய்தவியள்.

எனினும் அந்தப் புத்தர் சிலை சட்டவிரோத வைக்கப்பட்டதால், அதனைப் பொலிஸார் அகற்ற முற்பட்ட போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்துவது போல சில புத்த பிக்குகள் நடந்து கொண்டினம்.

தவிர ஒரு புத்த பிக்கு பொலிஸாரைத் தாக்க முற்பட்டார்.

இவ்வாறு பொலிஸாரின் கடமைக்கு இடையூறு செய்த பிக்குகளுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவேணும்.

**சாத்திரியார்:-** அப்ப ஏன் கங்காணியார் பொலிஸாரால் அகற்றப்பட்ட புத்தர் சிலையை மீண்டும் பொலிஸார் கொண்டு போய் வைத்தவர்கள்.

அதற்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால அனுமதி கொடுத்தது ஏன்?

**கங்காணி:-** சாத்திரியார் இங்க தான் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின்ர அரசியல் வியூகம் வேலை செய்யுது.நவம்பர் 21 ஆம் திகதி அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தின வியலல்லோ.



## கௌதம புத்தரின் சிலை என்பது மதவாதத்தைத் தூண்டும் சின்னமா?

அந்தப் பேரணிக்கு முன்னதாகத் தான் இனவாதப் பிக்குகள் இரவோடு இரவாக புத்தர் சிலையை திருகோணமலைக் கடற்கரையில வைத்தவியள்.

அப்படி சிலையை வைக்கும் போது அதனை பொலிஸார் அகற்றுவினம் என்பது சம்பந்தப்பட்ட பிக்குகளுக்கு நன்கு தெரியும்.

அவ்வாறு பொலிஸார் சிலையை அகற்றினால், அதை வைத்து அநுர அரசுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கலாம் என்பது தான் அவர்களின் திட்டம்.

அவர்களின் அந்த இனவாதத்திட்டத்தை முறியடிக்கும் வகையில அகற்றிய சிலையை பொலிஸார் மீளவும் வைத்தவியள்.

**சிறாப்பர்:-** கங்காணியார், அகற்றிய புத்தர் சிலையை மீளவும் வைத்ததன் மூலம் பேரினவாத சக்திகள் போட்ட திட்டத்தை அநுர அரசு முறியடித்தது எண்டு சொல்லுறியள். ஏன் அரசாங்கமும் பௌத்த சிந்தனையோடு செயற்பட்டுள்ளதெண்டு சொல்ல முடியாது.

**கங்காணி:-** சிறாப்பர் ஐயாவின்ர கேள்வி நியாயமானது தான், இங்கு தான் புத்தர் சிலை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை மீது நாங்கள் கவனம் செலுத்த வேணும்.

**மூப்பர்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:-** மூப்பர் அண்ணே! புத்தர் சிலை குறித்து பாராளுமன்றத்தில உரையாற்றிய ஜனாதிபதி அநுர; திருகோணமலை கடலோரத்தில புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தில ஏலவே புத்தர் சிலை இருக்கவில்லை.

அந்த இடத்தில ஒரு கன்ரீன் தான் இருந்தது. அதுவும் சட்ட விரோதமாக பௌத்த விகாரை ஒன்றினால் அமைக்கப்பட்டதாகும்.

இது விடயத்தில நீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்பு அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுர வெளிப்படையாகக் கூறியிருப்பது உண்மையில பாராட்டப்பட வேண்டும்.

முன்னைய ஆட்சித் தலைவர்கள் எவரும் இப்படி உண்மையை உண்மையாகக் கூறியதில்லை.

**விதானையார்:-** கங்காணியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை.

திருகோணமலைக் கடலோரத்தில புத்தர் சிலை வைக்கின்ற ஏற்பாடுகளுக்குப் பின்னணியில ஆரு இருந்தவியள் என்பதை அங்கு நடந்த விருந்தோம்பல் தெட்டத் தெளிவாக எங்களுக்கு உணர்த்தி நிற்குது.மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ புத்த பிக்குகளுக்கு விருந்து பரிமாறுவதைப் பார்த்த போது எல்லாம் தெரிகிறது தானே!

இவ்வாறு விதானையார் கூற, ஆலடி அமைதியாயிற்று அமைதியைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** திருகோணமலைக் கோணேஸ்வரர் ஆலயத்தில ஒரு சிறு கட்டுமானப் பணியைச் செய்வதாக இருந்தாலும் அதைத் தொல்லியல் திணைக்களம் தடுத்துப் போடும். இந்தாப்பாருங்க லண்டனில இருந்து கோணேஸ்வரர் ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்ட கண்டாமணியை நிறுவுவதற்கு உதவுங்கள் என எங்கட செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்கள் பல தடவைகள் கேட்ட போதும் எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அது பற்றி பாராளுமன்றில கதைக்கவேயில்லை.

அதோட திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தந்த இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நேரில் சந்தித்து கோணேஸ்வரர் ஆலய புனரமைப்புக்கு உதவுங்கள் எனக் கோரிக்கை விடுத்த கலாநிதி ஆறு திரு முருகன் அவர்கள் அது தொடர்பான விரிவான மகஜரையும் அவரிடம் கையளித்தார்.

அந்த மகஜர் தொடர்பில் இந்திய மத்திய அரசு கவனம் செலுத்தியது. அதன் நிமித்தம் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருவதாக இருந்தது.

ஆனால் உயர் மட்டத்தால அது திட்டமிட்டுத் தடுக்கப்பட்டது. எனினும் இது குறித்து அப்போது நம்மவர்கள் பாராளுமன்றத்தில எடுத்துக் கூறியிருந்தால், திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்புக்கு தடைகள் விதிக்கப்படுவதை சிங்கள மக்கள் அறிந்திருப்பர்.

என்ன செய்வது நாங்கள் தானே எங்கட பிரச்சினைகளைப் பற்றிக் கதைக்கமாட்டம் எனும் போது என்ன தான் செய்ய முடியும்.

இவ்வாறு வாத்தியார் கூற அதனைத் தானும் ஏற்றுக் கொள்வது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டம் தொடர்பில் வியாசரின் கருத்தென்ன?**

நவநீதன்-மாதகல்

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல எவரும் ஆர்ப்பாட்டங்களைச் செய்யலாம். ஆனால் அதற்கு தகுந்த காரணங்கள் வேண்டும். அப்போதே அதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

உதாரணத்திற்கு தமிழர் பகுதியில் புத்தர் சிலை வைத்ததற்கு அரசை எதிர்த்து தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் அது நியாயத்திற்குரியது.

ஆனால் அரசாங்கம் போதைக்கு எதிராகவும் ஊழலுக்கு எதிராகவும் பாதாள உலகக் குழுவுக்கு எதிராகவும் செயற்படும் நேரத்தில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மக்களுக்கு வெறுப்பையே ஏற்படுத்தும். அரசுக்கு எதிரான நாமலின் பேரணியும் அதையே பறைசாற்றி நிற்கிறது.

**அனைவருக்கும் நன்மை தரக்கூடிய ஒரு அறிவுபூர்வமான விடயம் கூற முடியுமா?**

இந்து - வதிரி

எமது சமூகத்திடம் இருக்கும் பெரிய பலவீனமே, சமூகத்தில் நடக்கும் அக்கிரமங்களைக் கண்டும் காணாமலும் விட்டு விடுவதே.

நமக்கேன் வீண் வம்பு எனக் கடந்து செல்லும் ஒவ்வொரு கணமும் எம் எதிர்கால சந்ததிக்கு நாம் செய்யும் மிகப் பெரிய துரோகமே அது.

எமது வீட்டுக் குப்பையை அயல்வீட்டில் கொட்டுவதில் தொடங்கும் சுயநலம் பேருந்தில் பெரியவர்கள் ஆசனமில்லாமல் நிற்கும் போது நாம் அவர்களைக் கவனிக்காதது போல அமர்ந்திருக்கும் கணம் வரை சுயநலம் எம்மைக் கட்டிப் போட்டு விடுகிறதே தவிர வேறு எதுவும் எம்மிடம் இல்லை என்பது தான் உண்மையானது.



மாவீரர்களை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்கள் திருந்தமாட்டார்களா வியாசரே?

**மாவீரர்களை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்கள் திருந்தமாட்டார்களா வியாசரே?**

சிவயோகன்-புளியங்குளம்

துள்ளித்திரிய வேண்டிய வயது. இளமையின் பட்டாம்பூச்சிகள் மனதில் சிறகடிக்கும் வயது.

நண்பர் குழாமுடன் ஊர் சுற்றும் வயது. தன் தாய் தந்தையருடன் மகிழ்வாய் இருக்கும் வயது.

இந்த மகிழ்வுகள் அத்தனையையும் துறந்து, தாய் நாட்டின் மீட்சிக்காக நெஞ்சில் நஞ்சைக் கட்டி களமாடிய வீர காவியங்களின் உயிர் பிரியும் கணம் வரை தன் தாய் மண்ணின் மீட்சிக்கனவே ஓடிக் கொண்டிருக்கும்.

அப்படிப்பட்ட உன்னதர்களின் பெயர் சொல்லிப் பிழைப்பு நடத்துபவர்களை ஓட விட்டு பச்சை மட்டையால் வெளுக்க வேண்டும் என்பது இந்த வியாசரின் அளவிட முடியாத விருப்பம். என் ஆசை நிறைவேறுமா?

**அன்று ரெயினா. இன்று ஜடேஜா அடுத்து யார் வியாசரே?**

பிரவீன்ஸ்-பருத்தித்துறை

ஐ.பி.எல் என்பது விறுவிறுப்பை மையமாகக் கொண்டது. இதில் ஓடும் குதிரைகளுக்கே கேள்விகள் அதிகம்.

சென்னை சுப்பர் கிங்ஸைப் பொறுத்தவரை டோனியின் ஓய்வை நிவர்த்திக்க சரியான விக்கெட் கீப்பரைத் தேடுகிறது.

இதில் தென்பட்டவரே சாம்சன். அதனால் சாம்சனை உள்ளே கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஜடேஜாவைப் பொறுத்தவரை சமீப காலமாக சரியாக ஆடவில்லை என்பது தான் உண்மை.

அவர் வேறு அணியில் இணைந்தால் நிச்சயம் அவர் பழைய நிலைக்குத் திரும்ப வாய்ப்பிருக்கிறது.

டோனியின் இடத்திற்கு ஜடேஜாவால் வர முடியாது என்பது போல சாம்சனினாலும் முடியாது.

டோனி ஒரு ஒப்பற்ற தனி ஆளுமை.

**இப்பிரபஞ்சம் அசமந்த நிலை மாற்றம் பெற்று விட்டதா வியாசரே?**

மகாலட்சுமி-உரும்பிராய்

மண் மலடாய்ப் போனால் என்ன? நீர் நஞ்சாய்ப் போனால் என்ன? காற்று அசுத்தமானால் என்ன? எமக்கு இலாபம் தான் முக்கியம் என்று பயிர் வளர ஒரு மருந்து. பூ பூக்க வேறொரு மருந்து. காய் கனியாக தனி மருந்து என்று மருந்தால் குளிப்பாட்டிய மரக்கறிகளையும் பழங்களையும் விற்று பணம் தேடுபவர்களிடம் மனச்சாட்சி இருக்குமா என்ன?

விளைச்சலைக் கூட்ட இயற்கையில் எத்தனை வழிகள் இருக்கிறது. இயற்கை விவசாயம் மனிதனை ஆரோக்கியமாக வாழ வைக்கும்.

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்று வந்த எவரும் பயிருக்கு பூச்சி கொல்லி மருந்தைத் தெளிக்க மாட்டார்கள்.

**வியாசரிடம் எத்தனை பட்டங்கள் உண்டு. அடுக்க முடியுமா?**

ராஜமௌலி-யாழ்ப்பாணம்

மன்னிக்க வேண்டும் பட்டங்களுக்காகவும் பதவிகளுக்காகவும் ஓடும் பழக்கம் வியாசரிடம் இல்லை.

நாம் வீதியில் செல்லும் போது நாய் ஒன்று நம்மை ஆக்ரோசமாகத் துரத்துகிறது.

அந்தக் கணம் நாம் நாயிடமிருந்து தப்பி ஓடுவதா? அல்லது நாயை எதிர்த்து நின்று அதை விரட்டிவிடுவதா? என்ற முடிவை எடுப்பதற்கு நாம் படித்த எந்தப் பட்டமும் நமக்கு உதவாது என்ற ஒப்பற்ற கருத்தை இவ்விடத்தில் ஆணித்தரமாகக் கூற விரும்புகின்றேன்.

**மாவீரர் மனங்கள் தற்போது குளிருமா வியாசரே?**

தவேது - வவுனியா

மாவீரர்களின் கனவுகள் ஒப்பற்றவை. ஒவ்வொரு மாவீரனும் மண்ணில் விழும்போது என் தாய் நாட்டை எனக்குப் பின்னுக்கு வரும் தோழன் காப்பான் என்ற நம்பிக்கையுடனேயே உயிர் விட்டிருப்பான்.

அவனின் கனவுகள் பலித்து விட்டதா என்றால் இல்லை என்பது தானே மெய். அப்போது எப்படி அவனின் மனம் குளிரும் சொல்லுங்கள்.

இப்போது நாம் எமது தனிப்பட்ட சுயநல அரசியலுக்காக தெருவுக்குத் தெரு மஞ்சள் சிவப்பு கொடி கட்டி தேசியப் பாடல்களை ஒலிக்க விட்டு சி.ஜ.டிகளை அழைத்து வந்து நான்காம் மாடிக்கு அழைக்கச் செய்து அதை வைத்து அரசியல் நடத்தலாம் என்றே நினைக்கின்றோம்.

**ஆண்ட இனம் - அடிமை இனம் வித்தியாசம் என்ன வியாசரே?**

கேதா-மாவிட்டபுரம்

அந்த இரண்டிற்கும் தமிழினம் தான் நல்ல உதாரணம். ஆண்ட இனம் ஒன்று அடிமை இனமாக பேரினவாதத்தின் காலின்கீழ் கிடக்கிறது.

தாயில்லாத பிள்ளையைப் போல தமிழினம் தவிக்க, வருபவர் போபவர் எல்லாம் விரல் நீட்டிப் பேசும் அளவில் நிலை இருக்கிறது.

எப்போதும் ஒரே போல நிலை இருக்காது என்பதை இப்போது ஆடுபவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் எங்கள் நிலை வரும் போது உங்கள் நிலையைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

அதிகமாக ஆடினால் அழிவது நிச்சயம் என்பதையும் இவ்விடத்தில் நினைவூட்டுவோமாக.



அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஆர்ப் பாட்டங்கள் தொடர்பில் வியாசரின் கருத்தென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக் குழுக்களுக்கு எவ்வாறு துப்பாக்கிகள் செல்கிறது?



ம.பிரான்சிஸ்க்
சுதந்திர
பத்திரிகையாளர்

பாதாள உலகக் கும்பலுக்கு ஆயுதம் விற்க ஒரு பொலிஸ் அதிகாரியால் முடிந்திருக்கிறது. அது இலங்கையில்தான் அண்மையில் நிகழ்ந்திருக்கிறது. இதற்கு இலங்கைக் களுத்துறையில் நடந்த ஒரு சம்பவம் மிகச் சரியான உதாரணமாயிற்று. கடந்த ஐப்பசி 11ஆம் திகதி களுத்துறை தெற்கு பகுதியில் ஒரு மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்திற்கு துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

அன்றைய தினமே களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அது தொடர்பில் கிடைபெற்ற தகவல்களின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினர் விசாரணையை மேற்கொண்டனர். களுத்துறை தெற்கு முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி பாதாள உலக குழுவினருக்கு பொலிஸ் துப்பாக்கியை வழங்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. விசேட அதிரடிப் படையினர் கடந்த ஐப்பசி 17ஆம் திகதி ருசிர கவிசன்



எதிறி சிங்கே - ஜாபான ("Japana") என அழைக்கப்படுபவரை களுத்துறையில் உள்ள நாகோடா பகுதியில் கைது செய்தார்கள். இதனைத் தொடர்ந்து இலங்கை பொலிஸ்த் துறையில் மிகப்பெரிய அபகீர்த்தியான ஒரு சம்பவம் அரங்கேறியது கண்டுபிடிக்கப்பட்டது. ஜாபான என்று அழைக்கப்படும் இவர் ஒரு பாதாள உலகப் பேர் வழி. இவர் இப்போது பொலிஸ்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார். ஜாபானவின் படுக்கை அறையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டுத் தயாரிப்பான 12-bore சொட்கண், ஒரு பிஸ்ரல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள், பலவகையான தோட்டாக்கள், கைவிலங்கு ஒன்று உட்பட இன்னும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர் அவர் களுத்துறை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு, இந்த துப்பாக்கிகள் எங்கு கிடைத்தது என விசாரிக்கப்பட்டபோது, அவர் அளித்த வாக்குமூலம் அதிர்ச்சி ஏற்படுத்தியது. ஜாபான அப்படி என்ன சொன்னார். முன்னாள் பிரதான பொலிஸ் பரிசோதகர் றுவான் விஜேசிங்கே - அவர் முன்பு களுத்துறை தெற்குப்பொலிஸ் நிலையத்தில் பொறுப்பாளராகப் பணிபுரிந்தவராவார் - தனக்குத் துப்பாக்கிகளையும் மற்றும் ஆயுதங்களையும் தந்தார் எனக் கை காட்டினார். இப்போது இந்தப் பொலிஸ் அதிகாரி பதவியில் இருந்து நீக்கப்பட்டு இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார், ஆனால் அவர் தனது புதிய பதவியில் பணிக்கு வரத் தவறிவிட்டார் என்பதும் தெரியவந்தது.

குறித்த இந்தப் பொலிஸ் அதிகாரியுடன் உனக்கு என்ன தொடர்பு என்று கேட்டு அவருடைய கையடக்கத் தொலைபேசியைப் பரிசோதனை செய்தபோதுதான் பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்துள்ளன. பொலிஸ் பொறுப்பதிகாரி ஜாபானவுடன் இருந்தமை மற்றும் அவருடன் விருந்துகளில் கலந்துகொண்டமை, பொலிஸ் பொறுப்பதிகாரியின் துப்பாக்கியை "ஜாபான" பாவித்த அனைத்து புகைப் படங்களும் இருந்துள்ளன. இந்த ஜாபான அந்தப் பொலிஸ் அதிகாரியுடன் மிக நெருக்கமாகப் புகைப்படத்தில் இருக்கிறார். அந்தப் பொலிஸ் அதிகாரியின் தொழில்முறை அதிகார கைத்துப்பாக்கியை தனது இடுப்பில் அணிந்தவாறு பல படங்களில் உள்ளார். ஒரு பாதாள அடியாளான ஜாபானவுடன் அந்தப் பொலிஸ் அதிகாரி உண்டு குடித்து மகிழ்ந்து மது மயக்கத்தில் மதியிழந்து விதவிதமான புகைப்படங்கள் எடுத்திருந்தார்.

இந்தப் பொலிஸ் அதிகாரி பாதாள குழுக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார். இந்த "ஜாபான" களுத்துறை பொலிஸ் நிலையத்தில் பல சந்தர்ப்பங்களில் பொலிஸ் நிலைய் அதிகாரியின் அறையில் விசாரணைகள் நடைபெறும்போது இவரும் விசாரணைகள் நடத்துவதாகவும் தெரியவந்துள்ளது.

தற்போதைய களுத்துறைத் தெற்குப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நாடகா குணசேகரா உடனடியாக ஓர் உள்ளக விசாரணையை ஆரம்பித்தார். களுத்துறை தெற்கு ஆயுதக் களஞ்சியத்தின் பொறுப்பாளர் சாஜன் மற்றும் ஹண்டபங்கொடவிலிருந்து நாகோடாவிற்கு ஆயுதத்தை கொண்டுசெல்லப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனத்தின் சாரதியிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். துப்பாக்கி களஞ்சியச்சாலைக்குப் பொறுப்பான பொலிஸ் சாஜன் தெரிவிக்கையில்: தன்னிடம் அந்த பிரதம பொலிஸ் பரிசோதக அதிகாரி பின்னர் திருப்பத் தருகிறேன் என உறுதியளித்துத் துப்பாக்கியை களஞ்சியத்திலிருந்து எடுத்துச் சென்றதாக அவர் வாக்குமூலம் அளித்திருக்கிறார். இந்தத் துப்பாக்கிக்கு 2012 ஆண்டிலிருந்து எந்தப் பதிவுகளும் ஆவணத்தில் இருந்திருக்கவில்லை என்பதும், இந்த துப்பாக்கி பொலிஸ் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என 2002 நீதிமன்றத்தின் ஒரு கட்டளை உள்ளதும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருகின்றது. அதாவது அந்த அதிகாரி பொலிஸ் களஞ்சியத்திலிருந்து துப்பாக்கிகளைக் கொண்டுபோய் ஒரு பாதாள அடியாளிடம் பத்திரமாய் ஒப்படைத்திருக்கிறார்.

குற்றப் பிரிவின் கூற்றுப்படி, ஹண்டபன்கொடை பகுதியில் துப்பாக்கி ஒப்படைக்கப்பட்ட தருணத்தைப் பதிவுசெய்ததாகக் கூறப்படும் புகைப் படங்கள் உட்பட, பெறுநரின் மொபைல் தொலைபேசியில் ஆதாரங்களை புலனாய்வாளர்கள் ஐப்பசி 29 அன்று கண்டறிந்தனர்.

தற்போது துப்பாக்கி கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிடத்தக்க அளவில், இந்த வழக்கு தொடர்பாக மேலதிகமாகத் தெரியவருவது: 9 மிமீ வெடிமருந்துகளின் 51 றவுன்சுகள் மற்றும் 38 வெடி மருந்துகளின் 16 றவுன்சுகளும் பொலிஸ் காவலில் இருந்து காணாமல் போயுள்ளதாக புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எப்படி இந்தக் கதை இருக்கிறது? இதேவேளைதான் கைதாவதைத் தடுக்கும் முகமாகக் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்பிணை கோரினார் அந்த பொலிஸ் அதிகாரி. இருப்பினும், பொலிஸ்த்துறையினர் முதற்கட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய நீதிபதி அனுமதி அளித்தார், மேலும் கைது நடவடிக்கையைத் தொடர்வதற்கு எந்த சட்டத் தடையும் இல்லை என்பதை உறுதிப்படுத்தினார். களுத்துறை நீதவான் நீதிமன்றம் பொலிஸ் அதிகாரி அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் களுத்துறை மாவட்ட சிஜடி விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது: களுத்துறை குற்றப் பிரிவு இயக்குநர் கமல் கிரியெல்ல மற்றும் OIC இன்ஸ்பெக்டர் நிலங்க சஞ்சீவ ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் மேலும் விசாரணைகள் நடந்து வருகின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, பொதுமக்களுக்குப் பாதுகாப்பையும் நம்பிக்கையும் வழங்க வேண்டிய நிறுவனங்களில்



உள்ள உத்தியோகத்தவர்கள் கடமை தவறும்போது ஒட்டுமொத்த நிறுவனத்தையும் மக்கள் அவநம்பிக்கையுடன் பார்க்க ஆரம்பிப்பார்கள். இப்போது மக்களே முன்வந்து போதைப் பொருட்களுடன் சம்மந்தப்பட்ட நபர்கள் பற்றிய விபரங்களை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்குகிறார்கள். ஆனால் என்னதான் மாற்றங்கள் வந்திருந்தாலும் 100 விகித மறுமலர்ச்சியைக் காண இன்னும் பெரும் தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. களுத்துறையில் ஒரு பொலிஸ் அதிகாரியின் பொறுப்பற்ற செயல் பொலிஸ் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கும் மாபெரும் அவமானம்.

"ஒரு தேசமாக ஒன்றிணைதல் - தேசிய இயக்கம்" என்ற தலைப்பில் அரசாங்கத்தின் புதிய போதைப் பொருள் எதிர்ப்பு இயக்கத்தின் தொடக்க விழாவில் பேசிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளையும், இந்த நடவடிக்கைக்கு அடிப்படையாக அமைந்த கண்டுபிடிப்புகளையும் முன்வைத்தார். அவற்றில், இராணுவ முகாம்களில் இருந்து ரீ-56 தாக்குதல் துப்பாக்கிகள் குற்றவாளிகளின் கைகளில் சிக்கியதாகவும், 73 துப்பாக்கிகள் காணாமல் போனதாகவும், 35 ஏற்கனவே மீட்கப்பட்டதாகவும் செய்திகள் இருப்பதாக தெரிவித்திருக்கிறார். வெடி மருந்துகளை வழங்கிய குற்றச்சாட்டில் ஒரு மூத்த இராணுவ கேணல் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அந்த அதிகாரியின் வங்கிக் கணக்குகளில் பணம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். மேலும், ஒரு பொலிஸ் அதிகாரி தனது சேவை ஆயுதத்தை விற்று நாட்டை விட்டு தப்பிச் சென்றதாகவும், விசாரணைகள் அதிகாரிகளுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கும் இடையிலான தொடர்புகளைக் கண்டறிந்துள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

மோட்டார் போக்குவரத்துத் துறை, வாகனங்கள் இல்லாமல் எண் தகடுகளை வழங்கியுள்ளன. மேலும் கம்பஹாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டதில் ஒரு பொலிஸ் அதிகாரி இரண்டு சட்டவிரோத வாகன எண் தகடுகளை வைத்திருப்பது அம்பலமானது என்றார். குடியேற்ற அதிகாரிகள் பாதாள உலக நபர்களுக்கு பாஸ்போர்ட்டுகளை எளிதாக்கியதாகவும், ஒரு புத்தக விற்பனையாளர் ஒரு குற்றவாளியின் பாஸ்போர்ட் விண்ணப்பத்திற்காக கைரேகைகளை வழங்கிய வழக்கு இருப்பதையும் தெரிவித்துள்ளார். குற்றவியல் நலன்களுக்குச் சேவை செய்வதற்காக ஒரு கறுப்பு அரசு உருவாக்கப்பட்டுள்ளதுபோல் தென்படுகின்றது. இந்த குற்றங்களுக்கு உதவும் அனைத்து அரச அதிகாரிகளும் உடனே மனம்மாற வேண்டும். எனவே பொலிஸ்த்துறையை சுத்திகரிப்பதன் மூலம் 80 வீதமான குற்றங்களை தடுத்துவிடலாம் என்பது பொதுவான கருத்து. இந்த நாட்டில் பாதாள உலக கறுப்பு அரசு என்றும் இரண்டு அரசுகள் இருக்கக்கூடாது. மக்களால் இயக்கப்படும் ஜனநாயக அரசு மட்டுமே இருக்க வேண்டும். எனவே, கிளீன் ஸ்ரீலங்கா தொடரட்டும் ஜனநாயக அரசு மலரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ்லாந்தில் நுளம்பு எப்படி வந்தது? தலையைப் பிய்க்கும் விஞ்ஞானிகள்



பொதுவாக, நுளம்புகள் வெப்பமான, ஈரப்பதம் கொண்ட இடங்களில் தான் வாழும். குளிர்ச்சியான சூழல், அவற்றின் வாழ்க்கைச் சுழற்சிக்கு பொருந்தாது. அதனால்தான், வடதுருவம் போன்ற கடும் குளிர் நாடுகளில் நுளம்புகள் வாழமுடியாது என்பதே இதுவரை விஞ்ஞான உலகத்தின் நம்பிக்கை.

ஆனால், கடந்த ஒக்டோபர் 23ஆம் திகதி, ஒரு விஞ்ஞானி ஐஸ்லாந்தில் நுளம்புகளை கண்டறிந்து, அதன் புகைப்படத்தையும் எடுத்துள்ளார். நுளம்புகள் அந்த நாட்டில் தோன்றுவது இதுவே முதல்முறை. இதனை அந்நாட்டு அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. உலக வெப்பமயமாதலின் விளைவுகளை வெளிப்படுத்தும் புதிய சுற்றுச்சூழல் எச்சரிக்கை என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**நுளம்புகள் இங்கு தகவமைத்துக் கொள்ள முடியுமா?**

ஐஸ்லாந்தின் தேசிய அறிவியல் நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் மத்தியாஸ் ஆல்ஃபிரட்சன், இதுகுறித்து வெளியிட்டுள்ள பதிவில்:

“இந்த நுளம்புகள் இங்கு தங்கள் இனத்தை நீண்டகாலம் நிலைநிறுத்திக் கொள்ளுமா என்பதை கவனிக்க வேண்டும். இவை வெப்ப நிலைக்கு தழுவி வாழக் கூடிய இனமாகக்கூட இருக்கலாம்.”

அவர் கூறியதாவது, இந்த நுளம்புகள் “**Culiseta annulata**” எனப்படும் இனம் ஆக இருக்க வாய்ப்புகள் அதிகம். இந்த இனம் குளிர்ச்சியான பகுதிகளிலும் தற்காலிகமாக வாழக்கூடிய திறன் கொண்டதாக உலகின் சில இடங்களில் காணப்பட்டுள்ளது.

**உலக வெப்பமயமாதலின் தாக்கமா?**

காலநிலை மாற்றங்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. உலகம் முழுவதும் குளிர்ந்த நாடுகளும் வெப்பமாக சூழலை நோக்கி நகரும் நிலையில் உள்ளன. அதனால், இத்தகைய நுளம்பு இனங்கள் தற்போது ஐஸ்லாந்து போன்ற இடங்களிலும் வாழும் வாய்ப்பு அதிகரிக்கலாம் என்று ஆல்ஃபிரட்சன் கூறியுள்ளார்.

இந்த நுளம்புகள் வெப்பமான நாடுகளில் இருந்து கப்பல் கொள்கலன்கள் வழியாக வந்திருக்கலாம் என்பது மற்றொரு சாத்தியம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஐஸ்லாந்தில் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். எனவே கப்பல் போக்குவரத்து வழியாக நுளம்புகள் வந்திருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

**அடுத்த கட்டம் என்ன?**

அறிவியலாளர்கள் தற்போது அந்தப் பகுதிகளில் நுளம்பு இனங்களால் தங்களை தகவமைத்துக்கொள்ள முடிகிறதா? என்பதை ஆராயும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவை வெப்பமயமாதலின் ஒரு குறியீடா அல்லது மனிதச் செயற்பாடுகளின் விளைவா என்பதும் அடுத்த சில மாதங்களில் தெளிவாகும். இது ஒரு சாதாரண சம்பவம் அல்ல. உலக காலநிலை மாற்றம் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கால் பதிக்கத் தொடங்கியிருப்பதற்கான எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

# ஆச்சி அறிவுரை



## விவசாயிகளின் வியர்வையை உறிஞ்சும் பத்தில் ஒன்று கழிவு முறை பேராண்டி...

அண்மையில ஒரு காணொளி பார்த்தன். அதில நெல்லைக் கையால வீசி விதைக்கிற நாடுகள் எல்லாம் நெல் இறக்குமதி செய்யிற நாடாகவே இருக்குது. கையால வீசி விதைத்தால் அதில அறுவடை குறைவு.

இதுவே நாத்து நட்டு வெள்ளாமை செய்தால் அதின்ர விளைச்சல் அமோகமாக இருக்கும் எண்டு சொன்னதோட நாத்து நடுற இயந்திரத்தை வைச்சு வயலில நெல் நடவு செய்யிற முறையையும் சொன்னார் அவர்.

நவீன விவசாய முறைக்கு நாங்கள் மாறவேணும் பேராண்டி. இல்லாட்டி எல்லாத்துக்கும் அயல் நாடுகளிட்ட கையேந்துற நிலைதான் வரும். எங்கட விவசாயத்தில இருக்கிற பிரச்சினை என்னெண்டால், காலம் அறிஞ்சு பயிர் நடுறதில்லை. வெங்காயம் விலை கூடிச்சுதெண்டால் முழு விவசாயிகளும் வெங்காயத்தை நடுறது. பிறகென்ன மூண்டு மாதத்திலை அறுவடை செய்ய வெங்காயத்தின்ர விலை ஐஞ்சு பத்து ஆகிடும்.

இது ஒருபக்கமெண்டால் இன்னொரு பக்கமும் இருக்குது. பத்துப் பரப்பு வயலிலை நெல் விதைச்சு அதை அறுவடை செய்து தங்கட உணவுத் தேவைக்கு மட்டும் பயன்படுத்துறது.

யாழ்.மாவட்டத்தில இப்பிடிப்பட்ட விவசாயிகள்தான் அதிகமா இருக்கினம். அது அவையின்ர சுயநலம் எண்டாலும் தன்னிறைவுப் பொருளாதாரத்துக்கு அது வலுச் சேர்க்குது. விவசாயத்தை மட்டும் வாழ்வாதாரம் நம்பிக் கொண்டிருக்கிற விவசாயிகளின்ர நிலை மிகமோசம் பேராண்டி.

இதுக்கு சந்தைக் குத்தகைதாரரும் பெரும் பொறுப்பை ஏற்க வேணும். ஓம், பயிர விதைச்சு மழை, வெயில் எண்டு கஷ்ரப்பட்டு அதை விளைவிச்சு சந்தைக்குக் கொண்டுபோனால், பத்துக்கு ஒன்று கழிவு அந்த விவசாயின்ர வியர்வையை உறிஞ்சி எடுக்குது. சந்தைகளில இப்பிடியான கழிவு முறை இல்லை எண்டு சொல்லுகினம். ஆனால் இப்பவும் பத்துக்கு ஒன்று கழிவு முறை நடந்துகொண்டுதான் இருக்குது.

மீறிக் கதைச்சால் சண்டித்தனம்தான் காட்டுவினம். உலகத்தின்ர பசியாற்றுற விவசாயிக்கு சண்டித்தனம் தெரியுமோ? தெரிஞ்சாலும் பிறகும் தொழில் செய்யவெல்லோவேணும் எண்டு அமைதியாப் போயிடுவான்.

விவசாயிகள கந்தறுக்கிற இந்தக் கழிவு முறையை ஒழிக்கவேணும் எண்டு கடந்த மார்ச் மாதம் நடந்த யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில பேசப்பட்டது.

அப்ப அதில கலந்துகொண்ட அதிகாரிகளும் சண்டித்தனக் கலாசாரம் இருந்தால் எப்பிடி எங்களால வேலை செய்ய ஏலும் எண்டு ஆளுநரிடம் கேட்டினம். இதுகளுக்கு நடவடிக்கை எடுக்கிறம் எண்டு சொன்னதோட கதை முடிஞ்சுது.

பேராண்டி, மரக்கறிய விளைவிக்கிற விவசாயி கந்தல் துணியோட ஓலை வீட்டில இருக்கிறான். ஆனால் அதை வாங்கி விக்கிற இடைத்தரகர்மார் மாடி வீடு கட்டி அமோகமா வாழுகினம். எந்த நாட்டில விவசாயம் தன்னிறைவு காணுதோ அந்த நாடு அபிவிருத்தியில முன்னேறும்.

எங்கட நாடும் முன்னேறுமா எண்டால் கேள்விக்குறிதான் பேராண்டி.

**ஆச்சி வருவா...**

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவோம் ஆன்மிகம்



### வீட்டில் தெய்வங்களுக்குக் கலசம் வைத்து வழிபடலாமா?

தெய்வங்களைப் படமாகவோ, சிறிய சிலை வடிவிலோ, யந்திர வடிவிலோ, தீப வடிவிலோ வழிபடலாம். இவை எளிமையானவை. ஆலயங்களில் ஸ்நபன விதி அடிப்படையில் சிறப்பாகக் கலசங்கள் வைத்து பூஜைகள் செய்வது உண்டு. வீடுகளில் விசேட காலங்களில் மட்டும் கலசங்கள் வைத்து பூஜிக்கலாம் தினமும் செய்ய வேண்டியது இல்லை.

### விளக்குகளை தினமும் தேய்த்து உபயோகிக்க வேண்டுமா?

தினமும் விளக்கேற்றி பூஜிக்க விரும்பினால் முறைப்படி தினமும் விளக்கைச் சுத்தம் செய்யத்தான் வேண்டும். விளக்கு என்பது வெளிச்சம் சம்பந்தப்பட்ட சமாச்சாரம் மட்டும் இல்லை. அது இறை சாந்நித்தியத்தின் அடையாளம். ஆகவே, தினமும் விளக்கைச் சுத்தம் செய்வதும் திரி மாற்றுவதும் சிறப்பு. உடல்நிலை ஒத்துழைக்கவில்லை எனில், கடவுளை மனதால் தியானித்து வழிபடலாம் இறையருள் கிடைக்கும்.

### சாமிப் படங்களில், வாடிய பூக்களை எப்போது அகற்றலாம்?

காலை, மாலை இரு வேளைகளிலும் புஷ்பம் சார்த்தி வணங்குவது சிறப்பு. ஒவ்வொரு முறையும் பூஜையின்போது பழைய வற்றைக் களைந்துவிட்டு புதிய பூக்களைச் சூட்டவேண்டும். தினமும் ஒருவேளை காலையில் மட்டுதான் வழிபாடு எனில், முதல் நாள் காலையில் போட்ட மாலை அப்படியே இருக்கலாம். மறுநாள் பூஜையின்போதுதான் மாற்ற வேண்டும்.

# உயிர் காக்கும் சைக்கிளிங்



உடலில் இருக்கிற தேவையற்ற கொழுப்பைக் கரைப்பதில் சைக்கிளிங் பெஸ்ட் உடற்பயிற்சி. சைக்கிளிங் செய்யும்போது நுரையீரல் ஓட்சிசனை அதிகமாக எடுக்கும். அதனால் இதயத்தின் ஆரோக்கியமும் நுரையீரலின் ஆரோக்கியமும் அதிகரிக்கும். கூடவே உடலின் செல்களுக்கும் ஓட்சிசன் அதிகமாகக் கிடைக்கும். இரத்த ஓட்டம் அதிகரிக்கும். சைக்கிளிங் செய்பவர்களின் நுரையீரலை அவ்வளவு சுலபமாக தொற்றுநோய் கிருமிகள் தொட்டுவிட முடியாது.

அதிகாலை நேரத்தில் சுத்தமான ஓட்சிசன் அதிகம் கிடைக்கும் என்பதால் இதுதான் சைக்கிளிங் செய்வதற்கு மிகச்சரியான நேரம்.

உடல் எடையைக் குறைக்க வேண்டுமென்றாலோ, அதிகப்படியான கொழுப்பைக் கரைக்க வேண்டுமென்றாலோ தினமும் ஒரு மணி நேரம் சைக்கிளிங் செய்ய வேண்டும். இதுவரை எந்த உடற்பயிற்சியும் செய்யாமல் இருந்தவர்கள், திடீரென்று தங்கள் 40 வயதில் இதையெல்லாம் செய்ய ஆரம்பிப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் இதயத்தின் ஆரோக்கியத்தையும், இரத்த அழுத்தத்தையும், மருத்துவரிடம் பரிசோதித்துப் பார்த்து சைக்கிளிங் செய்ய வேண்டும்

ஏனென்றால், உங்களுக்குத் தெரியாமல் சின்னதாக இதயத்தில் ஏதேனும் பிரச்சினை இருந்தால், திடீரென சைக்கிளிங் செய்யும்போது பாதிப்பு ஏற்படுத்தலாம். இதேபோல், இரத்த அழுத்தம் அதிகமாக இருந்து, அது தெரியாமல் நீங்கள் திடீரென சைக்கிளிங் செய்ய ஆரம்பித்தால் பக்கவாதம் போன்ற பிரச்சினைகளும் வரலாம்.

வயது 40இற்கும் குறைவு என்றாலும் அதிகப்படியான உடல் எடை கொண்டவர்கள் புதிதாக சைக்கிளிங் செய்ய ஆரம்பிக்கிறீர்கள் என்றால், மருத்துவரை ஆலோசித்துவிட்டு சைக்கிளிங் செய்ய ஆரம்பியுங்கள்.

முதல்நாளே ஒரு மணி நேரம்செலுத்தலாமா? கூடவே கூடாது. முதல் நாள் 10 நிமிடம், அடுத்த நாள் 15 நிமிடம், அதற்கடுத்த நாள் 20 நிமிடம் எனப் படிப்படியாக சைக்கிளிங் நேரத்தை அதிகரியுங்கள். இதையும், ஆரம்ப நாட்களில் காலையில் அரைமணி நேரம், மாலையில் அரைமணி நேரம் என்று பிரித்தும் செய்யலாம்.



# முட்டை பிரியாணி



## சமைப்போம் சுவைப்போம்



### தேவையானவை:

பாஸ்மதி அரிசி – அரை கிலோ
வேகவைத்த முட்டை – 6
முட்டை – 2, வெங்காயம் – 2
தயிர் – கால் கப், பச்சை மிளகாய் – 2
மிளகாய்த்தூள் – இரண்டரை கரண்டி
மல்லித்தூள் – 4 கரண்டி
மஞ்சள்தூள் – ஒரு கரண்டி
இஞ்சி, பூண்டு விழுது – ஒரு கரண்டி
பட்டை – 2 துண்டு
கிராம்பு – 4, ஏலக்காய் – 5
அன்னாசிப்பூ – 4, பிரியாணி இலை – 4
நெய் – 3 கரண்டி
தேங்காய் எண்ணெய் – 3 கரண்டி
மிளகுத்தூள் – சிறிதளவு

### செய்முறை

வெங்காயத்தைத் தோல் நீக்கி, மெல்லிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு வாணலியில் எண்ணெயை காயவைத்து, முக்கால் பங்கு வெங்காயத்தை நன்கு சிவக்க வறுத்துக்கொள்ளவும். அடி கனமான பாத்திரத்தில் 3 முதல் 4 கப் தண்ணீர் ஊற்றி, பாதியளவு பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை, அன்னாசிப்பூ சேர்த்துக் கொதிக்க விடவும். கொதித்தபின், பாஸ்மதி அரிசி, தேவையான உப்பு சேர்த்து முக்கால் பதத்துக்கு வேகவிடவும். வெந்தபின் தண்ணீரை நன்கு வடித்துக்கொள்ளவும்.

பின்னர் அடிகனமான, வாய் அகன்ற பாத்திரத்தில் நெய், தேங்காய் எண்ணெயை சூடாக்கவும். மீதமுள்ள பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை, அன்னாசிப்பூ சேர்க்கவும். மீதமுள்ள வெங்காயம், கீறிய பச்சை மிளகாய், சேர்த்து, இஞ்சி, பூண்டு விழுது சேர்த்துப் பொன்னிறமாகும் வரை வதக்கவும். பிறகு மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், சிறிதளவு உப்பு சேர்த்து பச்சை வாசனை போகும்வரை வதக்கவும். அதில் தயிர், ஒரு கப் தண்ணீர் சேர்த்து நன்கு கொதிக்க விடவும். வேகவைத்த முட்டைகளைத் தோல் நீக்கி, கீறிக் கொதிக்கும் மசாலாவில் சேர்த்து மூடியிட்டு எண்ணெய் மேலே தெளியும் வரை சிறு தீயில் வேகவிடவும். ஒரு பாத்திரத்தில் மீதமுள்ள முட்டையை உடைத்து ஊற்றி சிறிதளவு உப்பு, மிளகுத்தூள் சேர்த்து நன்கு கலந்து வைத்துக்கொள்ளவும். பின்னர் வேகவைத்த சாதத்தை மசாலாவின் மேல் விரித்துப் போட்டு, அதன் மேல் சிறிது தண்ணீர் தெளித்து, முட்டைக் கலவையைப் பரவலாக ஊற்றி, மூடிவிடவும். மூடியின் மேல் ஒரு கனமான பொருளை வைத்து, மிதமான தீயில் 15 முதல் 20 நிமிடம் சமைக்கவும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி, மெதுவாகக் கிளறி பரிமாறவும். **சுவையான முட்டை பிரியாணி ரெடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Discovery CHANNEL

# 150 கிராம்தான் எடை; 5 நாட்களில் ஐயாயிரம் கிலோ மீற்றர் பயணித்த அமூர் பருந்து



பறவைகள் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரம் கிலோ மீற்றர் வலசை செல்வதை நாம் அறிவோம். இந்த வலசை நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவு சாகசங்கள் நிறைந்தது. சவாலானது, அதீத பொறுமையையும் உழைப்பையும் விடா முயற்சியையும் கோருவது. அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து புறப்பட்ட அமூர் பருந்துகளின் வலசை.

**அமூர் பருந்தின் சாகச பயணம்**



வனவிலங்கு விஞ்ஞானிகளால் கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்ட மூன்று அமூர் பருந்துகளில் ஒன்று, இந்தியாவிலிருந்து புறப்பட்டு 5 நாட்களில் 5000 கி.மீ பயணித்து, சோமாலியாவை சென்றடைந்துள்ளது. அதாவது, ஒரு நாளுக்கு 1000 கி.மீ பயணித்துள்ளது. 5 நாட்களில் சிறிய இடைவேளை கூட இல்லாமல் அவை பயணித்துள்ளன. அபபாங் என்ற ஆண் பருந்து, அலாங் என்ற இளம் பெண் பருந்து, மற்றும் அஹூ என்ற பெண் பருந்து ஆகிய மூன்றும் அரேபியக் கடலைக் கடந்து ஆபிரிக்காவை நோக்கி பயணம் மேற்கொண்டுள்ளன. இந்த நீண்ட பயணம் அவற்றின் வலிமையையும் விடாமுயற்சியையும் வியக்க வைத்துள்ளது. தமிழ்நாடு சுற்றுச்சூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, சமூக வலைத்தளமான Xஇல் இந்தச் சாதனை குறித்து பதிவிட்டுள்ளார். அபபாங் இதற்கு முன்னரும் பலமுறை இதுபோன்ற வலசைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். "அபபாங் இப்போது கிட்டத்தட்ட 5400 கி.மீ தூரம் பறந்துவிட்டது. அதற்கு 5 நாட்கள் 15 மணி நேரம் ஆனது" என்று சாஹூ தனது பதிவில் எழுதியுள்ளார்.

**அமூர் பருந்து கண்காணிப்புத் திட்டம்**

வனவிலங்கு ஆய்வு நிறுவனத்தின் தலைமையில் நடத்தப்பட்ட மணிப்பூர் அமூர் பருந்து கண்காணிப்புத் திட்டத்தின் (கட்டம் 2) ஒரு பகுதியாக, நவம்பர் 11 இல் இந்த மூன்று பறவைகளுக்கும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டன. செயற்கைக்கோள் வரைபடத்தில் ஆரஞ்சு நிற குறியீட்டுடன் காணப்படும் அபபாங், வெறும் 150 கிராம் எடை கொண்டிருந்த போதிலும், அதன் பறக்கும் திறமையால் கண்காணிப்பாளர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்ட உடனேயே அபபாங் பயணத்தைத் தொடங்கியது. மத்திய இந்தியப் பகுதி வழியாக வெறும் 76 மணி நேரத்தில் 3000 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தை கடந்தது. மணிப்பூர் காடுகளிலிருந்து கிழக்கு ஆபிரிக்கா வரையிலான இந்த நீண்ட பயணத்தில், விஞ்ஞானிகள் மூன்று பறவைகளையும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

அமூர் பருந்துகள் (Amur Falcon) உலகின் நீண்ட தூரம் பறக்கும் வலசைப் பறவைகளில் ஒன்று. இவை ஒவ்வொரு ஆண்டும் சைபீரியா, சீனா போன்ற இடங்களிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு 20,000 - 30,000 கி.மீ. தூரம் பறந்து செல்லும் போது, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகாலாந்து, மணிப்பூர் (குறிப்பாக தாமெங்லாங் மாவட்டம்) ஆகிய இடங்களில் ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் 30-45 நாட்கள் தங்கி ஓய்வெடுக்கும். இங்கு இவை ஆயிரக்கணக்கில் கூட்டமாகத் தங்கும். வேட்டையாடுதல் காரணமாக ஒரு காலத்தில் அழிவின் விளிம்பில் இருந்த அமூர் பருந்துகளுக்கு மணிப்பூர் மக்கள் பாதுகாப்பான புகலிடமாகத் திகழ்ந்தனர்.

2012ஆம் ஆண்டு வரை மணிப்பூர் மக்கள் இந்தப் பறவைகளை அதிக அளவில் வேட்டையாடினர். இது வனத்துறையால் பாதுகாக்கப்பட்ட பறவை இனமாக வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், இவற்றை வேட்டையாடுவது அவர்களின் கலாசாரத்துடன் இணைந்திருந்தது. ஆனால் இலட்சக்கணக்கில் பறவைகள் கொல்லப்பட்டதனால் உலக அளவில் வனவிலங்கு ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

2012 - 2013 முதல், இந்தியாவின் வனத்துறை, Wildlife Institute of India (WII), சுற்றுச்சூழல் அமைச்சகம், உள்ளூர் குழுக்கள், கிராம சபைகள், இளைஞர் குழுக்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் கிராமங்களில் பெரிய அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இது மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. கொத்துக் கொத்தாக அவை கொல்லப்பட்ட தாமெங்லாங்கில் இப்போது ஆண்டுதோறும் அமூர் திருவிழா நடக்கிறது. அன்று வேட்டையாடியவர்கள் இன்று பாதுகாக்கும் தன்னார்வலர்களாக மாறியிருக்கின்றனர். இப்போது அங்கே கொல்லப்படும் பறவைகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பூச்சியம். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் பறவைகள் பாதுகாப்பாக தங்கியிருந்து செல்கின்றன!



# தெளிவே என் சிந்தனையுள்... 37

வியாபார நுட்பம் என்பது பலவாறானது. அது ஒவ்வொருவருடைய தனித்திறமை என்றே கூறவேண்டும்.

ஒரு புடைவைக் கடை. அதன் உரிமையாளரும் ஊழியர்களும் மேற்கொள்ளும் வியாபார நுட்பம் இது.

வாடிக்கையாளர் ஒருவர் ஒரு ஆடையின் விலை கேட்கிறார். தொழிலாளி முதலாளியிடம் அதன் விலை என்ன என்று கேட்கிறார்.

அதற்கு அவர் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா என்று கூறுகிறார்.

அவர் கூறுவது கேட்காததுபோல மீண்டும் மீண்டும் என்ன விலை என்று கேட்கிறார் தொழிலாளி. முதலாளிக்கு கோபம் வரவே இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயடா முட்டாள் என உரத்துக் கூறுகிறார்.

சரி... சரி... என்றவன் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்றான் வாடிக்கையாளரிடம். இப்போது வாடிக்கையாளரின் மனநிலை ஆயிரம் ரூபாய் இலாபம் என்று.

ஆனால் அந்த ஆடையின் உண்மையான விலை வெறும் ஐந்நூறு ரூபாய் மட்டுமே.

பேரம் பேசும் பலர் இவ்வாறான வியாபார நுட்பங்களை நம்பி ஏமாந்து விடுகிறார்கள்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : சிந்து பைரவி
குரல்: சித்திரா
வரிகள்: வைரமுத்து
இசை: இளையராஜா




பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்

பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்

பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்
ஏட்டுல எழுதவில்ல எழுதிவெச்சுப் பழக்கமில்ல
இலக்கணம் படிக்கவில்ல தலைகணமும் எனக்கு இல்ல

பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்

அர்த்தத்த விட்டுப்புட்டா அதுக்கொரு பாவமில்ல
பழகின பாசையில படிப்பது பாவமில்ல
என்னமோ ராகம் என்னன்னமோ தாளம்
தலைய ஆட்டும் புரியாத கூட்டம்
எல்லாமே சங்கீதந்தான்...ஆஆஆ...
எல்லாமே சங்கீதந்தான் சத்தத்தில் பொறந்த சங்கதிதான்
சட்ஜமமென்பதும் தைவதமென்பதும் பஞ்ச பரம்பரைக்கு அப்புறந்தான்

பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்

கவலை ஏதுமில்ல ரசிக்கும் மேட்டுக்குடி
சேரிக்கும் சேரவேணும் அதுக்கு உம் பாட்டப் படி
என்னயே பாரு எத்தன பேரு
தங்கமே நீயும் தமிழ்ப் பாட்டும் பாடு
சொன்னது தப்பா தப்பா...ஆஆஆ...
சொன்னது தப்பா தப்பா ராகத்தில் புதுசு என்னதப்பா
அம்மியரச்சவ கும்மியடிச்சவ நாட்டுப்புரத்துல சொன்னதப்பா

அம்மியரச்சவ கும்மியடிச்சவ நாட்டுப்புரத்துல சொன்னதப்பா

பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்
ஏட்டுல எழுதவில்ல எழுதிவெச்சுப் பழக்கமில்ல
இலக்கணம் படிக்கவில்ல தலைகணமும் எனக்கு இல்ல

பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடந்தான் அறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்

# உள்ளே சஞ்சு வெளியே ஜடேஜா! சி.எஸ்.கே-வின் திட்டம் என்ன?

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி எப்போதும் வீரர்களின் திறன்களைவிட உணர்வுகளுக்கு அதிக மதிப்பு கொடுக்கும். குடும்பம் போல அவர்கள் கட்டமைக்கும் அணியின் சூழலுக்கு ஒத்துப்போகும் வீரர்களே அந்த அணியில் நீண்ட காலம் பயணிக்க முடியும். மற்ற அணிகளைவிட வயதான வீரர் களைக் கொண்டிருந்தபோதும், சென்னை அணி கிண்ணத்தை வெல்ல இந்த உணர்வுதான் கார ணமாக அமைந்தது.

ஐ.பி.எல் மினி ஏலத்துக்கு முன்பாக ஒவ்வொரு அணியும் தாங்கள் தக்கவைக்கும் மற்றும் விடு விக்கும் வீரர்களின் பட்டியலை வெளியிட வேண் டும். அதே மாதிரி வீரர்களை ட்ரேட் செய்யவும் வாய்ப்பிருந்தது. இதில்தான் சென்னை அணி சர்ப்ரைஸ் கொடுத்திருக்கிறது. அணியின் முக்கிய வீரரான ஜடேஜாவையும் சாம் கர்ரனையும் ராஜஸ்தானுக்கு ட்ரேட் செய்திருக்கிறது. பதிலுக்கு அவர்களிடமிருந்து சஞ்சு சாம்சனை வாங்கி யிருக்கிறது.

ஜடேஜா சென்னை அணியின் அதிமுக்கிய மூன்று வீரர்களில் ஒருவராக எப்போதும் இருந் தவர். 2012இல் சென்னை அணிக்குள் வந்தவர், இடையில் சென்னை அணி தடை செய்யப்பட்ட காலத்தைத் தவிர்த்து மற்ற எல்லா சீசன்களிலும் மஞ்சள் ஜெர்ஸியில்தான் ஆடியிருக்கிறார். அணி யில் டோனிக்கு அடுத்த இடம் ஜடேஜாவுக்குதான். இருந்தது. ஒரு கட்டத்தில் டோனி ஓய்வை நோக்கி நகரலாம் என முடிவெடுத்து கப்டன் பதவியைத் துறந்தபோது ஜடேஜாதான் அடுத்த கேப்டனாக ஆக்கப்பட்டார். அந்த முயற்சி சரியாகக் கைகொ டுக்கவில்லை என்பது வேறு கதை.

இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம். நான்காண்டுகளுக்கு முன்பே டோனி இருக்கும் ஓர் அணியில் டோனியைவிட அதிக சம்பளம் ஜடேஜாவுக்குக் கொடுக்கப்பட்டது. அவரும் அதற்கேற்ற வகையில் அணியை வெல்ல வைக் கும் ஆட்டங்களை ஆடிக் கொடுத்தார். குறிப்பாக, அந்த 2023 சீசனின் இறுதிப்போட்டியை ரசிகர் களால் என்றைக்கும் மறக்கமுடியாது. ஜடேஜா இல்லையேல் அந்த வெற்றி சாத்தியப்பட்டிருக்காது.

ஜடேஜா அவ்வளவு முக்கியமான வீரராக இருந்தாலும் அவரின் சமீபத்திய பார்ம் சொல்லும்படி இல்லை. பேட்டிங் ஓடரில் மேலே ஏற்றி ஆட வைத்தபோதும் அங்கொன்றும் இங்கொன்று மாகவே நல்ல இன்னிங்ஸ்களை ஆடினார். அதேநேரத்தில் இன்னொரு பக்கம் டோனிக்குப் பிறகான ஒரு நட்சத்திர அந்தஸ்து கொண்ட இந்திய விக்கெட் கீப்பரை அணிக்குள் கொண்டு வர வேண்டிய தேவையும் இருந்தது.

டோனியின் ஓய்வை இன்னும் எத்தனை சீசன்களுக்குத் தள்ளிப் போட முடியுமென்றும் தெரியவில்லை. வரவிருக்கும் சீசனோடு டோனி விடைபெறக்கூடும். எனில், அவர் இடத்துக்கு யார் எனும் கேள்வி இருக்கிறது. கடந்த சீசனில் சஞ்சு சாம்சனுக்கும் ராஜஸ்தான் அணி நிர்வாகத்துக்கும் கொஞ்சம் ஒத்துப்போகவில்லை. சாம்சன் காய மடைந்ததைக் க்ரணமாக வைத்து ரியான் பராக்கை அடுத்த கேப்டனாக புறொமோட் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

இதில் சாம்சன் கொஞ்சம் ... இருந்தார். ... சென்னை அணி நிர்வாகம் ...டீல் பேச இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. சாம்சனுக்கும் சென்னை போன்ற பெரிய அணியில் ஆட எந்த இரண்டாம் யோசனையும் இல்லை. அவரும் ஒப்புக்கொண்டார். டோனிக்குப் பிறகு ரசிகர்களுக்கும் அணிக்குமான நெருக்கத்தை உறுதி செய்யும் வீரராக சாம்சன் இருப்பார் என அணி நிர்வாகம் நம்புகிறது.

ராஜஸ்தான் அணி ஜடேஜாவை ஏற்கவும் வலுவான காரணங்கள் இருந்தன. அது ஒரு இளம் வீரர்களால் சூழப்பட்ட அணியாக இருக்கிறது. திறமையாக ஆடி வெற்றிகளைக் குவித்தாலும், கோப்பையை வெல்ல சிரமப்படுகின்றனர். இந்த இடத்தில்தான் ஜடேஜா மாதிரி அனுபவ வீரர் கைகொடுப்பார் என ராஜஸ்தான் அணி நம்புகிறது. மேலும், ஜடேஜாவுக்கு வேறெந்த அணிக்கும் செல்வதை விட ராஜஸ்தானுக்குச் செல்வது இன்னும் நெருக்கமானது. அவரின் கரியரே அங்கேதான் தொடங்கியது.

சென்னை அணி சாம்சனை வாங்கியிருந்தாலும் அவருக்கு கப்டன் பதவியை வழங்கவில்லை. ருத்துராஜ்தான் கப்டன் என அறிவித்திருக்கி றார்கள். சென்னை அணி எப்போதும் தடாலடி முடிவுகளை எடுக்காது. கொஞ்சம் நிதானமாகவே யோசிக்கும். மேலும், இரண்டாண்டுகளுக்கு முன்பு ட்ரேடிங்கில் ஹர்திக்கை வாங்கி ரோஹித்தை கப்டன் பதவியிலிருந்து மும்பை அணி நீக்கியது. அணிக்கு விசுவாசமாக இருக்கும் ஒரு வீரருக்கு இழைக்கப்பட்ட அநீதியாக அது பார்க்கப்பட்டது. சொந்த ரசிகர்களே அந்த அணியின் மீது எதிர் மறைக் கருத்துகளை முன்வைக்க ஆரம்பித்தனர். அந்த மாதிரி ஒரு எதிர்மறை வலைக் குள் சிக்கும் முடிவை சென்னை அணி எடுக்கவில்லை. இன் னும் ஒன்றிரண்டு சீசன்களில் ருத்துராஜால் கிண்ணத்தை வென்று கொடுக்க முடியவில்லை யெனில், சாம்சன் சில சீசன்களுக்கு கப்டன் ஆக்கப்ப டலாம்.

மினி ஏலத்தில் எல்லோர் கண்களும் கேமரூன் கிரீன் மீதே இருந்தாலும், விடுவிக்கப்பட்ட மேக்ஸ் வெல், டேவிட் மில்லர், டூ பிளேஸிஸ், லியாம் லிவிங் ஸ்டோன், சாம்பா, ராகுல் சாகர் போன்ற அதிரடி வீரர்கள் ஏலத்தை எந்தத் திசையில் திருப்புவார்கள் என்பதுதான் பெரிய கேள்வி. மொத்த ஐ.பி.எல்லின் பவர் பலன்ஸையும் மாற்றிப்போடப்போகிற மினி ஏலம் இன் னும் சில நாள்களில் நடக்கவிருக்க, அது எந்தெந்த வீரர்களுக்கு என்ன ஜெர்சியைக் கொடுக் கப்போகிறது என்பதைக் காத்திருந்து பார்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி னி மா



**"மண்டாடி"** படத்தில் பாய்மரப்படகு செலுத்துபவராக நடிக்கிறார் சூரி. இராமேஸ்வரம் சுற்றுவட்டாரத்தில் அதன் படப்பிடிப்பு நடந்துவருகிறது. "பெரும் உழைப்பைக் கொட்டி பாய்மரப் படகு ஓட்டுநருக்கான பயிற்சியைப் பத்தே நாட்களில் கற்றுத் தேர்ந்திருக்கிறார் சூரி!" என்று வியக்கிறார்கள். சூரியின் அடுத்த படம் குறித்தும் பேச்சு தொடங்கிவிட்டது. "அயலான்" ரவிக்குமார் இயக்குகிறார். இன்னும் சில மாதங்களில் படப்பிடிப்பு தொடங்கும் என்கிறார்கள்.



**கே.எஸ்.ரவிக்குமார்** டைரக்ட் செய்த "படையப்பா" நவீனத் தொழில்நுட்பத்தில் இன்னும் பல மாற்றங்கள் செய்து தரம் உயர்த்தப்பட்டு விரைவில் ரீ-ரிலீஸ் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்தத் தகவல் ரஜினிக்குத் தெரிவிக்கப்பட்டபோது மிகவும் சந்தோஷமடைந்தாராம். இது சம்பந்தமாக, ஒரு முன்னோட்ட வீடியோ விரைவில் வெளியாகும் என்கிறார்கள்.



**மம்மூட்டியுடன்** மீண்டும் இணைந்திருக்கிறார் மோகன்லால். அவர்கள் இருவரும் இணைந்து நடிக்கும் "பேட்ரியாட்" படப்பிடிப்பு மும்முரமாக நடந்துவருகிறது. முன்னதாக, இருவரும் ஏழு படங்களில் இணைந்து நடித்திருந்தாலும் இந்தப் படத்தை முக்கியமானதாக மோகன்லால் கருதுகிறார். இன்னொரு விடயம், மம்மூட்டி மேலும் இரண்டு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.



**வெற்றிமாறன், சிம்புவின்** படத்தை இயக்கி வருகிறார். கதையமைப்பு நீண்டு கொண்டே போவதால் அதை இரண்டு பாகங்களாக்கும் யோசனையில் இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். இந்த இரண்டு பாகங்களையும் முடித்துக் கொடுத்துவிட்டுதான் தனுஷின் "வடசென்னை 2" படத்திற்கு வருகிறார். அதை வேல்ஸ் பட நிறுவனம் தயாரிக்கிறது. இப்போது சிம்பு 49 படத்தின் ஒரு பாகத்தை மட்டுமே எழுதி முடித்துப் படமாக்கி வருகிறார் வெற்றி. இது எப்படி வருகிறது என்பதைப் பொறுத்தே இரண்டாவது பாகம் மேலும் சில மாற்றங்களைப் பெறும் எனப் பேசிக் கொள்கிறார்கள்.



**ஆண்ட்ரியா** தயாரித்த "மாஸ்க்" படத்தின் மூலம் மீண்டும் தமிழுக்கு வருகிறார், ருஹானி சர்மா. சண்டிகாரில் கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு மாடலிங் செய்துவந்தவர் ருஹானி. தமிழில், "கடைசி பெஞ்ச் கார்த்தி" என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். அதன் பிறகு, ஹிந்தி, தெலுங்கில் பல படங்களில் நடித்துவந்த ருஹானி, இப்போது "மாஸ்க்" மூலம் திரும்பி வந்திருப்பதில் மகிழ்கிறார்.



**சந்தானமும் ஆர்யாவும்** சேர்ந்து உடற்பயிற்சி செய்வதிலிருந்து ஊரில் இருந்தால் தினமும் சந்தித்துக்கொள்வது வரை நெருங்கிய நண்பர்கள். இருவரும் சேர்ந்து நடிக்க முடிவு செய்துவிட்டார்கள் என்பதுதான் அண்மைச் செய்தி. சேர்ந்து கதைகள் கேட்டு வருகிறார்கள். இரண்டு படங்களில் சேர்ந்து நடிப்பது அவர்கள் திட்டம். வழக்கம்போல் காமெடி அதகளம்தான்.

## சொல்லவே இல்ல...

### நித்யா





"பாரதிய ஜனதா கட்சியில் அண்ணாமலை தலைவராக இருந்தபோது சென்னை அளவில் பொறுப்புத் தந்தார்கள். கொஞ்ச நாள் தீவிரமாக செயற்பட்டேன். அதன்பின் ஒரு கார்ப்பரேட் நிறுவனத்தில் வேலை கிடைக்க அதற்காக ஹைதராபாத் போய் விட்டேன். கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்கள் அரசியலில் ஈடுபடுவதை விரும்புவதில்லை. அதனால் கொஞ்ச நாளைக்குக் கட்சிப் பணிகளில் ஈடுபடவில்லை. அதுமட்டுமல்லாமல், இங்கே நடக்கின்ற அரசியல் பற்றிக்கூட எந்தவொரு செய்தியையும் தெரிந்துகொள்ளவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் திரும்ப சென்னைக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிவிட்டு வந்து பார்த்தால், இங்கே கட்சியில் தலைவரையே மாற்றிவிட்டார்கள். அதனால் இப்போதைக்கு கட்சியும் வேண்டாம், கொடியும் வேண்டாம் என்கிற மூடுக்குப் போய்விட்டேன்."

## மினி டைரி...

### கேபிரில்லா



**பிடித்த விடயம்**

டான்ஸ். இப்போது நடித்துக்கொண்டிருக்கின்ற சீரியல் கேரக்டரை வைத்து என்னைக் கூப்பிடுகிறார்கள். கொஞ்சம் முன்னாடி "பிக்பாஸ்" கேபி என்று கூப்பிட்டார்கள். எனக்குப் பிடித்தது டான்சர் கேபிதான்.

**பிடித்த நபர்**

என் அம்மா. எனக்காக நிறைய தியாகங்களைச் செய்திருக்கிறார். நான் ஷூட் போனால் அவர்கூட வராத நாளே இருக்காது. எனக்காக அவர் பார்த்துக் கொண்டிருந்த வேலையையே இராஜினாமா செய்தவர்.



**பிக்பாஸ்**

கேம்தான். ஆனால் கவனமாக விளையாட வேண்டிய ஆட்டம். ஏனோதானோ என்று இருந்தால், இருக்கின்ற மரியாதையும் போய் விடலாம். எனக்கு வித்தியாசமான அனுபவத்தைத் தந்தது.

**சீரியல்**

இந்த ஏரியாவுக்குள் வந்து சில வருடம்தான் ஆகுது. இந்த உலகத்துக்குள்ளேயும் பெரிய மக்கள் கூட்டம் இருக்கிறார்கள். அவர்கள் நம்மைக் கவனிக்கிறது நெகிழ வைக்கிறது.

**லவ்**

சின்ன வயதில் நிறைய பசங்க புரொப்போஸ் செய்திருக்கிறார்கள். அதெல்லாம் அந்த வயதுக்கே உரிய குறும்புகள். பொதுவாகச் சொல்ல வேண்டும் என்றால் லவ் என்கிறது நல்ல ஒரு ஃபீல்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## முதல் மனிதர்



ஒரு பையனுக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம். முதல் மனிதன் எப்படி வந்தான்? என்று.

அவன் அவனுடைய அப்பாவிடம் போய், அப்பா, முதல் மனிதன் எப்படி தோன்றினான் என்று கேட்டான். அதற்கு அவர் சொல்கிறார், நாமெல்லாம் ஆதாம் ஏவாள் மூலமாக உலகுக்கு வந்தவர்கள் என்று பதில் சொல்கிறார்.

இருந்தாலும் பையனுக்கு குழப்பம் இன்னும் தீரவில்லை. அவன் தனது அம்மாவிடம் சென்று கேட்கிறான்.

அதற்கு அம்மா சொல்கிறார், நாமெல்லாம் குரங்கிலிருந்து வந்தவர்கள் என்று. இப்போது பையனுக்கு இன்னும் குழப்பமாகியது. ரொம்ப யோசனையாக உட்கார்ந்து இருக்கிறான்.

அதைப் பார்த்து அவன் அப்பா, உன்னுடைய சந்தேகம் இன்னும் தீரவில்லையா? என்று கேட்கிறார். அதற்கு அந்தப் பையன் அம்மா சொன்னதைச் சொல்கிறான்.

அப்பா உடனே சொல்கிறார், இரண்டுமே சரிதான்டா. நான் என் வம்சாவளியை சொன்னேன்.

உன் அம்மா அவள் வம்சாவளியைச் சொல்லி இருக்கிறாள் என்று சொன்னார். பையன் இப்போது ரொம்பத் தெளிவாகிவிட்டான்.

அப்பாவைக் கேட்டான், என்னப்பா இன்றைக்கு சாப்பாடு உங்களுக்கு வெளியிலையா என்று?

## வெறும் கல்



ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது.

அது வைரம் என்றறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான். அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன். இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான். ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான். ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான்.

இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக் கொண்டு சென்றான். ஆத்திரமடைந்த வியாபாரி. அந்த வழிப்போக்கனை பார்த்து, "அட... முட்டாளே!" அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும். அறிவில்லாமல் விற்றுவிட்டாயே! என்று திட்டினான். அதற்கு அவன், அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான் ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ மிகப்பெரிய முட்டாள்" என்றான்.

சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும், கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

# கவிதைக் கலசம்

## "மனிதம் பேசும் குரல்கள்"

வறுமை முதல் சமத்துவம் வரை,
அமைதி முதல் இயற்கை வரை,
மனநலம் முதல் மனிதநேயம் வரை
ஒவ்வொன்றும் சமூகத்தின் ஒரு சுவாசம்

அன்பும் புரிதலும்
எவ்வளவு அவசியம் என்பதை
உணர்த்தும் முயற்சிதான்
"மனிதம் பேசும் குரல்கள்"
ஒவ்வொரு வரியிலும் உணர்வு,
ஒவ்வொரு பாகத்திலும் பொறுப்பு,
ஒவ்வொரு கவிதையிலும்
சமூகத்தின் உண்மை பிரதிபலிக்கிறது

இவை வெறும் தொகுப்பு அல்ல
இது சமூகத்தின் இதயம் துடிக்கும் ஒலி



**நடராசா கோபிராம் - உளவியல் சிறப்புக்கலை மாணவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## பாதை ஒளிர்ந்திடப் பாடுபடு



போதையை ஒழித்திடப்
பாதையில் இறங்கிய
பேர்களின் கைகளைப் பலப்படுத்து!
எங்கள் வேதனை இத்துடன்
விலகியே போய்விடும்
வேடிக்கை விட்டுனை நிலைப்படுத்து!

சோதனையால் தினம்
சோர்ந்த நம் தாய்நிலப்
பாதையில் ஒளிவரப் பாடுபடு!
வெற்றிச் சாதனையால் மனம்
சாந்திபெறும் இனிச்
சலனமில்லை எனச் சபதமெடு!

பேதமை பேசியே
புறணிகள் கூறிடும்
விமர்சனத்தை இனி விட்டுவிடு! - நல்ல
போதனை கூறியே
சாதனையாய் எங்கள்
சந்ததி வாழ்வினைச் செப்பனிடு!

**வன்னியூர் - வரன்**
**விசுவமடு, கிளிநொச்சி.**

## அழியாப் பொக்கிஷங்கள்



முத்து மணி மாலைகளை
அணிந்து எம் - மாவீரத்
தெய்வங்கள் தொடுக்கப்பட்டு
வீற்றிருக்கிறார்கள் எம்விழி முன்னே...!
போர்க்களம் சென்று போராடி
உயிரைப் பிரிந்த உன்னதமான
சந்தன மேனிகள் - எம்
அழியாப் பொக்கிஷங்கள்...!
நீதி காக்க நியாயம் செழிக்க
வழிவகுத்து சென்றனர்...!
தாயை விட தாயகத்தையே
விரும்பினார்கள் - பச்சை
வயலிடையே பாலரைப் போல
ஓடித்திரிந்த - எம்
உல்லாசப் பறவைகள் என்றும்
நீங்காத நினைவலைகளாக
வீற்றிருப்பீர்கள் எம் உள்ளத்திலே...!

**"ஈழத்தின் மகள்"**
**காருண்யா யேசுதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ். கோட்டை

78

செங்கை ஆழியான்

தனித்திருந்த பண்ணைச் சந்திக் காவலரணை விமானங்கள் தாக்கின. ஆர்பிஜி மூலம் றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது. கோட்டை 'மதிலின் மீதிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இவற்றிற்கு எதிராக அக் காவலரணால் தாக்குப்பிடிக்க முடியாது போனது.

தண்டவாளங்கள் உடைந்து போயின. மண்மூடைகள் சிதறின. (காயமடைந்த போராளிகளைப் பங்கர்களுடாக அப்புறப்படுத்திவிட்டு, அவ்விடத்தில் புதிய போராளிகள் நிலையெடுத்துத் தாக்கினர். எனினும், பண்ணைச் சந்திக் காவலரண் முற்றாகத் தகர்ந்துபோனதும் புலிகள் அதனைக் கைவிட்டு நகர நேர்ந்தது.

தொலைத்தொடர்புக் காவலரணிலிருந்து பண்ணைச் சந்திக் காவலரணிற்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர் விமானங்கள் தொலைத்தொடர்பு நிலைப்பகுதியில் மாறிமாறிக் குண்டுகளை வீசத் தொடங்கின. அதேவேளை சின்னக்கோட்டைக்குள் அரண் எடுத்திருந்த இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் மெதுவாகப் பண்ணைச் சந்திக் காவலரணை நோக்கி நகர்ந்த போது, மண் மூடைகளற்ற பாதுகாப்பற்ற பங்கருக்குள் நின்றிருந்த போராளிகளின் துப்பாக்கிகள் முழங்கின. முன்னேறிய இராணுவத்தினர் குண்டடி பட்டுக் சரிய, ஏனையோர் பின்வாங்கிச் சின்னக்கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

பண்ணைக் கரையில் போராளிகளின் துப்பாக்கிச் சன்ன மழையிடையே புகுந்து தப்பிவந்து கரையேறிய இராணுவத்தினர் சிலர் பொலிஸ் நிலையக் கட்டடங்களைக் கைப்பற்றும் நோக்குடன் கடற்கரை வீதியில் நகர்ந்தனர். பொலிஸ் காவலரணிலிருந்தும் விளையாட்டரங்குக் காவலரணிலிருந்தும் முழங்கிய துப்பாக்கி வேட்டுகளுக்கு அவர்கள் பலியாகி நிலத்தில் சரிந்தனர்.

எனினும் மண்டைதீவிலிருந்தும் கடலிலிருந்தும் கோட்டையிலிருந்தும் ஏவப்பட்ட குண்டுகளால் பொலிஸ் நிலையக் காவலரண்கள் உடைந்தன. உடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண்களாக்கி போராளிகள் போரிட்டனர்.

**அன்று பகல் 11-15 மணி**

மண்டைதீவிலிருந்து பண்ணைக் கரையில் இறங்க முயன்ற இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஏற்படுத்திய ஆற்றாமை விமானப் படைகளின் மூர்க்கமான தாக்குதலாக மாறியது. மூன்று போர் விமானங்கள் யாழ்ப்பாண நகரைச் சுற்றி வந்து போராளிகளின் நிலைகள் மீது குண்டு வீசுவதாக எங்கும் வீசின. ஒரு போர் விமானம் பண்ணைச்சந்திக் காவலரணைத் தகர்த்தெறியும் நோக்குடன் சில தடவை கள் வேமாகக் குத்தெனச் சரிந்து சாய்வாக எழுந்து குண்டுகளை வீசியது. (தொடரும்)

# புது வாழ்வு

அன்று பகல் முழுவதும் இளையபல்லவனை அதே தெளிந்த புத்தியுடன் உலாவ விடுவது அபாயமென்ற முடிவுக்கு வந்து "நேற்றிரவு முழுவதும் உறக்கமில்லையென்றீர்களே ஏன்?" என்று பேச்சை மாற்றினான்.

"நேற்றிரவு சரியான மது கிடைக்கவில்லை" என்று காரணம் கூறினான் இளையபல்லவன்.

"அப்படியா?"

"ஆம்"

"எனக்குச் சொல்லியனுப்பியிருந்தால் நான் அனுப்பியிருப்பேன்?"

"இப்பொழுதுதான் அனுப்புங்களே. பகலிலாவது சிறிது உறங்குகிறேன். கண்ணெரிச்சலும் தலைவலியும் அதிகமாயிருக்கிறது." என்றான் இளைய பல்லவன்.

அவசியம் அனுப்புவதாகச் சொல்லிப்போன பலவர்மன் சிறந்த மது வகையறாக்களை அடுத்த சில நிமிடங்களுக்குள் அனுப்பி வைத்தான். அந்த மதுவில் பெரும்பாகத்தை அருந்திவிட்டுப் பஞ்சணையில் படுத்த இளைய பல்லவன் உச்சிவேளை கிட்டிய பொழுதுகூட எழுந்திருக்கவேயில்லை.

இளையபல்லவனையும் இளையபல்லவன் அறைக்கு வந்து போவோர்களையும் கண்காணிக்கப் பலவர்மன் நியமித்திருந்த ஒற்றர்கள் மிகவும் மகிழ்ச்சி தரும் செய்திகளையே அவனுக்குக் கொண்டு சென்றனர். உச்சி வேளை வரையில் உறங்கிய இளைய பல்லவனை எழுப்ப முயன்ற அமீரும் கண்டியத்தேவனும் எப்படி நடத்தப் பட்டார்களென்பதைக் கேள்விப்பட்ட பலவர்மன் பெரும் பூரிப்படைந்தான். அந்தச் செய்தியைக் கொண்டு வந்த ஒற்றனை ஒரு முறைக்கு இரு முறையாக அதைப் பற்றி விசாரிக்கவும் செய்தான்.

"உண்மையாக அப்படியா நடத்தினான் இளைய பல்லவன் அமீரையும் கண்டியத்தேவனையும்?" என்று விசாரித்தான் பலவர்மன்.

வணங்கி நின்ற ஒற்றன் சொன்னான் "ஆம் பிரபு அப்படித்தான் நடத்தினார் படைத் தலைவர்" என்று.

"அமீரைகூடவா?" என்று வியப்புக் குரலிலும் மண்ட விசாரித்தான் பலவர்மன்.

"அமீர்தான் முதலில் வந்தார். அவர்தான் மிகவும் கேவலப்படுத்தப்பட்டார்" என்றான் ஒற்றன்.

"எப்பொழுது வந்தான் அமீர்?"




169

# கடற்புறா

"உச்சி வேளைக்குச் சற்று முன்பு"

"வந்து என்ன கேட்டான்?

அது தெரியாது உள்ளே சென்றார். ஒரு விநாடிக்கெல்லாம் போ வெளியே என்று இளையபல்லவன் வெறிக் கூச்சல் கேட்டது அமீரைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு அறைக்கு வெளியே வந்தார் இளையபல்லவர்."

"பிறகு?"

"காட்டுப் பகுதியில் பூர்வகுடிகள் நெருங்கிறார்கள் என்று ஆத்திரத்துடன் கூவினார் அமீர்."

"உம்"

"நெருங்கினால் நெருங்கட்டும். போய்விடு. நெருங்கினால் இந்த ஊர் போதும். இந்த ஊர் உன் பாட்டன் வீட்டுச் சொத்தா என்று இளையபல்லவர் கூவி விட்டு உள்ளே சென்று பஞ்சணையில் விழுந்தார்.

"பிறகு"

"அமீர் இளையபல்லரைச் சபித்துக்கொண்டே சென்றார். "என்ன சபித்தார்?" "எப்படியாவது ஒழியட்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
472
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மக்களின் கேள்விகள்...

**1. எனது தந்தைக்கு சிறுநீரக பழுது ஏற்பட்டமையால், எனது தாயார் அவருடைய ஒரு சிறுநீரகத்தைத் தானமாக கொடுத்தார். எனினும் எனது தந்தை இரண்டு வருட காலமே உயிருடன் இருந்தார். பொதுவாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்து கொண்டவர்கள் எவ்வளவு காலம் உயிர் வாழ முடியும்?**

சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை என்பது, மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இன்னொருவரின் சிறுநீரகத்தைத் தானமாக வழங்கும் போது, அந்த சிறுநீரகத்தின் செயற்திறன் மற்றும் பெற்றுக் கொண்டவரின் வாழ்க்கைக் காலம் என்பன பல்வேறு காரணங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன.

அதில் பிரதானமான காரணமாக, ஒருவருக்கு சிறுநீரக நோய் ஏற்பட்டதற்கான முதல் காரணம் என்னவென்று நாம் சிந்திக்க வேண்டும். உதாரணமாக, நீரிழிவு நோயினால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு இருக்கு மாயின், பெரும்பாலும் அவரது மற்ற உடல் உறுப்புகளும் பாதிக்கப்பட்டிருக்கும். எம்மை அறியாது, அவர்களுக்கு இருதய நோய்கள், பாரிசவாதம், கிருமித்தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படும். இந்நிலையில் சிறுநீரகம் பாதிக்கப்பட்டால், சத்திரசிகிச்சை மூலம் சிறுநீரகத்திற்கான ஒரு தீர்வை மட்டுமே வழங்கமுடியும். அவர்களுடைய மற்ற உறுப்புகளுக்கான தீர்வை வழங்க முடியுமா என்பது சந்தேகம் தான்.

அதன் காரணமாகத் தான், சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்ய முன், அவரால் இந்த சத்திர சிகிச்சையை தாங்கிக் கொள்ள முடியுமா, இதனால் அவருக்கு மாரடைப்பு, பாரிசவாதம் போன்றவை ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறதா, இந்த சத்திர சிகிச்சைக்கு பின்னர் எம்மால் கட்டுப்படுத்த முடியாத கிருமித்தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறதா, அவருடைய உடம்பு புதிய சிறுநீரகத்தை எந்தளவு ஏற்றுக் கொள்கிறது எனும் விடயங்களை மிகக் கவனமாக பார்க்க வேண்டும். ஆகவே, சிறுநீரக நோயாளிகளுக்கு, சிறுநீரக சத்திர சிகிச்சை மூலம் உடனடியாக எல்லா தீர்வுகளும் கிடைத்துவிடும் என்று எண்ணக் கூடாது. முதலில் புதிய சிறுநீரகம் அவருக்கு ஏற்புடையதா, அதன் மூலம் அவருக்கு நன்மை ஏற்படுமா என மிகக் கவனமாக அவதானித்து, அதன் பின்னர் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் தொடர்ந்தும் அவர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும். தொடர்ந்தும் அவர்கள்



மருத்துவ ஆலோசனைப் படி மருந்துகளை எடுக்க வேண்டும். தொடர்ந்தும் அவர்கள், தங்களுக்கு கிருமித்தொற்று ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அநேகமாக சிறுநீரக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களில் 80-90% ஆனவர்களுக்கு அந்த சிறுநீரகம், பத்து வருடங்களுக்கு தொழிற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. சிலரில் 15 அல்லது 20 வருடங்களுக்கு அந்த சிறுநீரகம் தொழிற்படக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகிறது. சிலருக்கு ஒன்று அல்லது ஐந்து வருடங்களுக்குள் சிறுநீரக செயல்திறன் அற்று போவதையும் காணக்கூ டியதாக இருக்கிறது. இது பல காரணங்களால் தீர்மானிக்கப்படுகிறது.

**2. எனக்கு அடிக்கடி சிறுநீரக கிருமித்தொற்று ஏற்படுகிறது. இதற்கு பலதடவைகள் சிகிச்சை பெற்று வந்தேன். தொற்று ஏன் ஏற்படுகிறது என்பதை அறிய பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்தும் சாதாரணமாகவே இருப்பதாக கூறுகிறார்கள். இதற்கான தீர்வைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்?**

இளம்வயதினரிடையே, குறிப்பாக மகளிருக்கு இந்த சிறுநீரக கிருமித்தொற்று ஏற்பட்டு, இது அவர்களுக்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. அடிக்கடி சிறுநீர் கழித்தல், அடிவயிற்று வலி, காய்ச்சல் போன்றவை ஏற்படலாம். ஏன் இப்படி சிறுநீரக அல்லது சிறுநீர்வழி கிருமித்தொற்று ஏற்படுகிறது என்று பார்த்தால், இதற்கு மூன்று வகையான காரணங்கள் காணப்படுகிறன.

முதலாவது, நோயாளி சம்பந்தமான காரணிகள் ஆகும். உதாரணமாக, நோய் எதிர்ப்பாற்றல் குறைவாக காணப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அதாவது, அவர் நீரிழிவு நோயாளரா என பார்ப்பது முக்கியமாகும். இவ்வாறு இருப்பின் அடிக்கடி சிறுநீரக அல்லது சிறுநீர் வழிப்பாதை கிருமித்தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகிறது.

இரண்டாவது காரணமாக இருப்பது, சிறுநீரக அல்லது சிறுநீர்வழிப் பாதையில் காணப்படுகிற மாறல்கள் அல்லது அதிலேற்படும் ஏதாவது மாற்றங்கள் ஆகும். உதாரணமாக, அவ்விடங்களில் ஏற்படும் கற்கள் அல்லது கட்டிகளாக இருக்கலாம். அல்லது சிறுநீர்வழியில் ஏற்படும் மென்சவ்வாலான அடைப்புகளாக இருக்கலாம். இவ்வாறான நிலையில் உங்களுக்கு சிறுநீர் தொற்று ஏற்படும் போது அதனை முற்றாக குணப்படுத்த அல்லது இல்லாமல் செய்ய முடியாமல் இருக்கலாம்.

இந்த சிறுநீர்வழித் தொற்று, உடலமைப்பு காரணமாக ஆண்களை விட பெண்களில் அதிகமாக காணப்படுகிறது. இது மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பெண்களிலும் வயோதிப பெண்களிலும் oestrogen hormone உடம்பில் குறைவதால் ஏற்படும் வறட்சி தன்மை காரணமாக ஏற்படுகிறது. இதற்கு பெண்ணியல் மருத்துவர் அல்லது சணநீர் மருத்துவரிடம் தகுந்த சிகிச்சை எடுப்பதன் மூலம் நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். மூன்றாவது காரணமாக, வீரியம் மிக்க கிருமி, தொற்றை ஏற்படுத்தி உடலை விட்டு அகலாமல் இருக்குமாயின், மீண்டும் மீண்டும் கிருமித்தொற்று ஏற்படும். இதற்கு வேறுபட்ட கிருமித்தொற்று காணப்படுகிறதா என பரிசோதித்து பார்ப்பதன் மூலம் தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**3. எனக்கு நாரி வலி, உயர் குருதி அமுக்கம், ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி போன்ற நோய்கள் காணப்படுகின்றன. பல மருந்துகளைப் பாவித்து வருகின்றேன். இது எனது சிறுநீர காங்களை பாதிக்காதா? நீண்டகாலம் இம் மருந்துகளை பாவிப்பது பாதுகாப்பானதா?**

நிச்சயமாக வலிக்கான மருந்துகளை நீண்ட காலம் பாவிப்பது பாதுகாப்பற்றது. அது, பல்வேறுபட்ட பாதிப்புகளை உங்களுக்கு ஏற்படுத்தலாம். மிக முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது சிறுநீரக பாதிப்பாகும். இதனை தடுக்க வேண்டும் எனில், வலிக்கு மருந்துகளை எடுக்காமல், அதற்கான மூல காரணத்தைக் கண்டறிய வேண்டும். இந்த ஒற்றைத் தலைவலி போன்ற நோ ஏற்படுவதை தடுப்பதற்கு என்ன செய்வது என அறிய வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நரம்பியல் வைத்திய நிபுணரை நாடும் போது அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். உடனடியாக நோவை குறைப்பதற்கு அல்லது தீர்வை காண்பதற்கு நாம் வலிநிவாரணிகளை பாவிக்கிறோம். நோ குறைந்தாலும் அது ஒரு சரியான தீர்வாக இருக்காது. இதனால் நிச்சயமாக உடல் உறுப்புகள், முக்கியமாக சிறுநீரகம் பாதிக்கப்படும். நோவிற்கான மருந்துகள் கட்டாயமாக தேவைப்படும் போது, சிறுநீரகத்திற்கு பாதிப்பற்ற நோ மருந்துகள் எவை என அறிந்து, மருத்துவ ஆலோசனைப்படி மட்டும் மருந்துகளை பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே, வலிக்கு மருந்துகளை எடுப்பதை விடுத்து, வலிக்கான காரணத்திற்கு மருந்துகளை எடுக்க வேண்டும்.

**Dr. பிரம்மா.R. தங்கராஜா**
**சிறுநீரக சிறப்பு சிகிச்சை நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாய் விமான கண்காட்சி விழுந்து நொறுங்கிய விமானம்



(டுபாய்)

டுபாய் விமான கண்காட்சியில் இந்தியாவின் தேஜஸ் போர் விமானம் விழுந்து நொறுங்கியுள்ளது.

இந்த விபத்தில் விமானி உயிரிழந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. டுபாயில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் விமான கண்காட்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

இதில் உலகம் முழுவதிலிருந்து சுமார் 1,500 விமானங்கள் பங்கேற்றன. இந்நிலையில் விமான கண்காட்சியின் இறுதி நாளான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்திய விமானப் படையின் தேஜஸ் போர் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கி தீப்பிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

கண்காட்சியில் ஆயிரக்கானக்கான மக்கள் சாகசத்தை பார்த்துக் கொண்டு இருக்கும் போது இந்த விபத்து நடந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேஜஸ் விமானம் இந்தியாவில் ஹிந்துஸ்தான் ஏரோ நாட்டிகல் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மிக முக்கியமானது எனக் கூறப்படுகிறது.

இது மணிக்கு 2200 கிலோ மீற்றருக்கு மேல் வேகமாக செல்லக் கூடியது. மேலும் விமானம் தாங்கி கப்பலில் இருந்து புறப்படவும், அதில் தரையிறங்கும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டது. இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவிவருகிறது. (நி)

## பாகிஸ்தானில் பசை தொழிற்சாலையில் வெடி விபத்து

- 18 பேர் உயிரிழப்பு
- 21 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கிழக்கு பகுதியான லாகூரைச் சேர்ந்த பைசலாபாத் நகரில் அமைந்துள்ள பசை தயாரிப்பு தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 21 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இந்த வெடிப்பு சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பில் தொழிற்சாலை கட்டடம் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் அருகிலுள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

விபத்திற்கான காரணம் இதுவரையில் தெளிவாக தெரிய வரவில்லை. எனினும், பின்னர் பொலிஸார் வெளியிட்ட தகவலின்படி எரிவாயு கசிவு காரணமாக வெடிப்பு சம்பவம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வெற்றி பெற்ற மைதானத்தில் மந்தனாவுக்கு காதலை தெரிவித்த பலாஷ்



இந்திய இசைக்கலைஞரும் திரைப்பட தயாரிப்பாளருமான பலாஷ் முச்சால், இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனாவுக்கு உலகக் கிண்ண மைதானத்தின் நடுவில் தனது காதலை முன்மொழிந்து ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

விளையாட்டு ரசிகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்த இந்த சம்பவம், சமீபத்தில் மகளிர் உலகக் கிண்ணத்தை அவர் தூக்கிச் சென்ற மைதானத்தில் இடம்பெற்றதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிகழ்வின் காணொளியை சமூக ஊடகங்களில் பலாஷ் பகிர்ந்துள்ளார். மும்பையின் டிரி பாட்டில் மைதானம் மந்தனாவுக்கு மறக்க முடியாத நினைவுகளை உருவாக்கிய இடம்.

ஒரு மாதத்திற்கு முன்பு மகளிர் உலகக் கிண்ணத்தை இந்திய அணி இந்த மைதானத்திலேயே வெற்றி கொண்டது.

பலாஷ் முச்சால், மந்தனாவின் கண்களை மூடிக் கொண்டு மைதானத்தின் நடுப் பகுதிக்கு அழைத்துச் சென்று, கண்களைத் திறந்த பின்னர் கையில் மோதிரத் துடன் ஒரு முழங்காலில் இறங்கி அவளிடம் காதலை முன்மொழிந்தார்.

ஆரம்பத்தில் ஒரு நொடி திகைத்துப் போன மந்தனா, பின்னர் புன்னகைத்து அவரும் தனது காதலை முன்மொழிந்தார். (3)

## ஆற்றில் விழுந்த பேருந்து 16 பேர் உயிரிழப்பு! கம்போடியாவில் சோகம்



(கம்போடியா)

கம்போடியாவில் பேருந்து ஒன்று பாலமொன்றில் மோதி ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சிக்கி 16 பயணிகள் உயிரிழந்துள்ளதோடு, 20 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பிரசித்திபெற்ற அங்கோர் வாட் ஆலய வளாகத்தின் தாயகமான சீம் ரீப்பில் இருந்து தலைநகர் புனோம் பென் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே மத்திய மாகாண மான கம்போங்தோமில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை பேருந்து விபத்துக்குள்ளானதாக அப்பிராந்திய பிரதி பொலிஸ் அதிகாரி சிவ் சோவன்னா தெரிவித்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் 40 பயணிகள் இருந்ததாகவும், அந்த பயணிகள் அனைவரும் கம்போடியர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)


**மணமக்கள் தேவை**
சூரிய செவ்வாய்
1994-2005 வரை
மணமக்கள் தேவை
தொடர்புகளுக்கு
077 889 4353 (Whatsapp)
0049764752219 (Viber)
00491741789740 (Whatsapp)
(1728)

**வீடு விற்பனைக்கு**
யாழ்- பருத்தித்துறை வீதியில், புத்தூர் சந்தியில், மேற்கு ஒழுங்கையில் தெற்கு பக்கத்தில் இரண்டாவதாக 2 1/2 பரப்பு காணியில் அமைந்துள்ளது.
Whatsapp : Country - Canada +1
Phone- 647 913 7995
T.P - 077 599 9162
(5993)

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ்ப்பாணத்தில்
வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு
077 695 4530
(5992)

**வேலைவாய்ப்பு**
வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடி தேவை.
வயது எல்லை 20-40 இற்கு உட்பட்ட ஆண்கள்.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
❖ மேற்பார்வையாளர் (Supervisor)
❖ இயந்திர இயக்குநர் (Machine Operator)
❖ களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)
❖ சாரதி (Drivers)
❖ மூடை தூக்கும் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் (Laborers)
❖ கணக்கு நிர்வாகி (Accounts Executive)
(174)
தொடர்புகளுக்கு
RG Brothers, No: 228, Canel Road,
Elakanda Hendala Wattala.
077 434 6367

**மணமகன் தேவை**
1990 இல் பிறந்த அவிட்ட நட்சத்திரத்துடன் கூடிய மணப்பெண்ணிற்கு மணமகன் தேவை.
எதிர்பார்ப்பு- வெளிநாடு மட்டும்.
T.P No -075 392 1524,
076 655 9480
(1729)

**முதியோர் பராமரிப்பு**
பயிற்றப்பட்ட பணியாளர்களால் வீட்டிலேயே வைத்து முதியோர்களை பராமரித்துக் கொடுக்கப்படும். தனி அறைகள் கொடுக்கப்படும், இணைந்தும் இருக்கலாம்
T.P No :-077 069 3486
WhatsApp No:-077 024 2031
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
(5929)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 51 ஆண்டுகளுக்குப் பின்

# உலக கிண்ணத்துக்கு தகுதி பெற்றும் சோகம்!




2026 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கு ஹைதி அணி தகுதி பெற்றும் அந்நாட்டு ரசிகர்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

2026 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து தொடர் கனடா, அமெரிக்கா மற்றும் மெக்சிகோ ஆகிய மூன்று நாடுகளில் நடைபெற உள்ளது.

இதன் தகுதிச் சுற்று போட்டிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில், கிட்டத்தட்ட 51 ஆண்டுகளுக்கு பிறகு சிறிய தீவு நாடான ஹைதி 2026 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது.

உலகக் கிண்ண தொடருக்கு ஹைதி அணி தகுதி பெற்று இருந்தும் அமெரிக்காவிற்குள் நுழைய அந்நாட்டு மக்களுக்கு தடை விதிக்கப் பட்டு இருப்பதால் அந்நாட்டு ரசிகர்கள் ஹைதி கால்பந்து போட்டியை நேரில் பார்க்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாதுகாப்பு காரணங்களாக ஹைதி உட்பட 12 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களை அமெரிக்காவிற்குள் நுழைய தடை விதித்துள்ளார்.

அதே சமயம் கால்பந்து போட்டி யில் கலந்து கொள்வதற்காக ஹைதி அணியின் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு மட்டும் இந்த் தடையில் இருந்து விலக்கு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (3)





# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் நூறாவது ஜனன தினம் - 23.11.2025

"பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சஸ்க்ருதாம்

தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" - பகவத்கீதை. அத் - 4

நல்லவரைக் காப்பதற்கும் கெட்டவரைச் சீர்திருத்தவும் அல்லது அழிப்பதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன் என்பது தான் மேற்குறிப்பிட்ட சுலோகத்தின் கருத்தாகும்.

மனிதனைச் சீராக்குவதற்கு மனித உடம்பையே எடுத்து உடம்பினூடாக எப்படி வாழவேண்டும் என்று வழி காட்டவேண்டிய தேவை பிரபஞ்சத் தலைவனுக்குண்டு. பிரபஞ்சத்தை படைத்தவன், அதைப் பாதுகாப்பதும் அழிப்பதும் அவரின் செயலாகும். இப் பிரபஞ்சப் பேருணர்வை (Cosmic Consciousness) பிரபஞ்ச சக்தியாகப் (Cosmic Energy)பரிணமித்து சகலதையும் படைத்திருக்கிறது. இப் பேருணர்வை கடவுள் என்றும் சொல்வார்கள். கடவுள் என்ற பதத்திற்கு பலவிதமான விளக்கங்கள் கொள்வதால் உலகில் முரண்பாடு எழுகின்றது.

வெளித்தோற்றத்தினை விட்டு உள்ளிருக்கும் தத்துவ சக்தியை (ஆத்மா, தூய ஆவி, அல்லா தர்மம், அன்பு, சாந்தி, அகிம்சை) நோக்கினால் எல்லாம் ஒன்று என்ற அத்வைத மனப்பாங்கு ஏற்படும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா எம்மைப் பார்த்து தெய்வ சொரூபிகளே! ஆத்ம சொரூபிகளே! பிரேம சொரூபிகளே! தர்ம சொரூபிகளே! என்று அழைத்துள்ளார். அவர் தன் சங்கல்ப்பத்தினாலே தாயைத் தெரிவு செய்து அவரின் கருப்பையில் உதித்து உலகத்தில் பிறந்து வாழ்ந்து முதுமையடைந்து மானிடரை நல்வழிப்படுத்தி சனாதன தர்மத்தைப் போதித்து 24.04.2011 மகா சமாதியடைந்தார். தான் தனது முழுமையான பிரபஞ்ச உணர்வு நிலையிலிருந்து எப்போதும் மானிடரை வழிநடத்துவேன் என்று இறுதிக்காலத்தில் உத்தரவாதம் கொடுத்துள்ளார். இப் பரிணமிப்பை பல இடங்களில் (விபூதி சொரிதல், மலர் விழுதல், அமிர்தம் சொரிதல், மாலை வளர்தல்,கனவில் தரிசனம் கொடுத்தல்) பலருக்குக் காட்டியுள்ளார்.

பிரபஞ்சப் பேருணர்வு, ஒளிப் பந்தாக ஈஸ்வரம்மாவின் கருப்பையில் இருக்கும்போதே பல அற்புதங்கள் நிகழ்ந்தன. பெற்றோர் இவருக்கு சத்யநாராயணராஜ௺ என்று பெயர் வைத்தார்கள். பக்தர்கள் பின்பு சத்ய சாயி பாபா என்று அவர் கூறியபடியே அழைத்தார்கள். அவர் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்று பின்தங்கிய கிராமத்தில் பிறந்தார்.

சிறுபிள்ளையாக இருக்கும்போதே சக மாணவர்களுடன் பஜனை செய்வதும் பல பொருட்களை சிருஸ்டித்து மாணவர்களுக்குக் கொடுத்து தனது தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தினார்.

தாயாருக்கும் இவர் அவதாரம் என தெரியவில்லை. அன்னை இப்பிள்ளை படித்து ஒரு ஆசிரியராகவோ அல்லது இலிகிதராகவோ வரவேண்டுமென்றே விரும்பினார். சிறுபராயத்தில் இவரின் தெய்வீகத் தன்மையை உணர்ந்தவர்களாக பாட்டனார் கொண்டமராஜ௺, பாடசாலை- ஆசிரியர் மஹ்பூப்கான், கிராமத்து மதுவரி உத்தியோகத்தர் ஆஞ்சநேயர், வூல்வ் மெசிவ் (ரஷ்ய ஞானி) ஆகியோராவர். எல்லோரிலும் மேலாக அடுத்தவீட்டில் வசித்த கர்ணம் சுப்பம்மா மிகவும் அன்புடன் நேசித்தார். சத்யநாராயணராஜ௺ 14ஆவது வயதில் (20.04.1940) பாடப் புத்தகங்களை கீழே வைத்துவிட்டு "மாயை விலகி விட்டது. பக்தர்கள் அழைக்கிறார்கள். எனது பணியை நிறைவேற்றத் தொடங்க வேண்டும்" என்று கூறி வீடு, உறவினர் ஆகியவற்றின் பற்றைவிட்டு வெளியேறி தனது அவதாரப் பணியை ஆரம்பித்தார். இவரின் தெய்வீக சக்தியை அனுபவித்த பலர் பின்தொடர்ந்தார்கள்.

**இவரின் போதனைகள் சில :**

◆ "நான் ஒரு புதிய மதத்தைத் ஸ்தாபிக்க வரவில்லை. எனக்கு ஆட்கள் சேர்க்கவேண்டியதும் இல்லை. மானிடர் அவரவர் மதங்களின் மூலமே உன்ன தநிலையை அடையலாம். ஓர் இந்து நல்ல இந்துவாகவும் ஒரு கிறிஸ்தவன் நல்ல கிறிஸ்தவனாகவும் புத்த மதத்தவர் நல்ல தர்மசீலர்களாகவும் இஸ்லாமியர் நல்ல இஸ்லாமியர்களாகவும் உன்னத நிலையை அடைய வேண்டும். எனது செயற்பாடு சனா தன தர்மமாகவேயிருக்கும். எல்லா மதங்களும் சமமானவை. எல்லாம் மேன்மையானவை. எல்லா மதங்களையும் சமமாக மதிக்கவேண்டும்.

ஒரேயொரு மதம் - அது அன்பெனும் மதம்

ஒரேயொரு மொழி - அது இதய மொழி

ஒரேயொரு சாதி - அது மானிட சாதி

ஒரேயொரு கடவுள் - அவர் எங்கும் உள்ளார்.

◆ மனிதகுலம் இக் கலியுகத்தில் மிகவும் மோசமாகக் கீழ்நோக்கிப் போவதால் பிரபஞ்சப் பேருணர்வு அடுத்தடுத்து மூன்றுமுறை அவதரித்து சீர் செய்யவேண்டியதாயிற்று. இம்மூன்றும் அடுத்தடுத்து நிகழும் அவதாரத்தையே சாயி அவதாரம் என்று கூறப்பட்டது.

1. முதலாவது சீரடி சாயி பாபா அவதாரம் (28.09.1835-15.10.1918) நிகழ்ந்து முடிந்துவிட்டது.

2. இரண்டாவது சத்ய சாயி பாபா அவதாரம் (23.11.1926-24.04.2011) நிகழ்ந்து முடிந்துவிட்டது.

3. மூன்றாவதான பிரேம சாயி பாபா பிறந்துள்ளதாக ஊகம். ஆனால் அவர் தன்னை பிரகடனப்படுத்தவில்லை.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தனது பணியை செயற்படுத்துவதற்காக சத்ய சாயி சேவா நிறுவனத்தையும் பல கல்வி நிறுவனங்களையும் நிறுவியுள்ளார். தன்னலமற்ற சேவையே சிறந்தது என்று போதித்து கிராமங்களில் பல சேவைகளைச் செய்து போக்குவரத்து, குடிநீர், உறைவிடம் ஆரோக்கியம், கல்விசாலைகள், நாராயண சேவை என சேவைகள் மூலம் எமக்கு வழிகாட்டியுள்ளார்.

தனது பணி நீண்டகாலம் நீடித்திருப்பதற்காக சத்ய சாயி சேவா நிறுவனத்தில் ஆன்மீகம் கல்வி, சேவை, இளைஞர், மகளிர் அணிகளைச் சேர்த்துள்ளார்.



தனது வாழ்வே தனது செய்தி என்று சொல்லி பிற்காலத்தில் சாயி அடியார்களின் வாழ்வே தனது செய்தியாக மாறும் என்று சொல்லியுள்ளார். ஒரு செயற்பாட்டிற்கும் பணம் வசூலிக்கக்கூடாது என வலியுறுத்தியுள்ளார்.

"சாயி நாமத்தில் நம்பிக்கையில்லாதவருக்கு சாயி கடவுள் என்று பிரச்சாரம் செய்யவேண்டாம். நாளாந்த வாழ்வில் எப்போதும் எச் செயலிலும் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற 5 அடிப்படை விழுமியங்களை இணைத்துக்கொள்ளவேண்டும் என்று விளக்கமளியுங்கள். இக் குணங்களை மழுங்கடிக்கும் 6 உள்எதிரிகளான காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சர்யம் ஆகியவற்றை நலிவடையச்செய்து இல்லாமலாக்க வேண்டும்."

அவர் சாராம்சமாகத் தந்த மகா வாக்கியங்களாவன :

◆ "அனைவரையும் நேசி, அனைத்திற்கும் சேவை செய்"

◆ எப்போதும் உதவி செய். ஒருபோதும் தீங்கு செய்யாதே"

எல்லா உருவங்களும் நாமங்களும் ஒரு கடவுளையே அடையும்.

சமஸ்த லோகா: சுகினோ பவந்து

**வைத்திய கலாநிதி**
**இ. கணேசமூர்த்தி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரியாதை வயதைப் பொறுத்து வருவதில்லை.
அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகிறது.
– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## தாங்கள் கைது செய்யப்படுவதை தடுப்பதற்காக நடத்தப்பட்ட பேரணி

ஜனாதிபதி மாளிகையை மக்கள் சூழ்ந்து கொண்டனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தப்பி ஓடுவதற்கு வழியின்றி தவிக்கிறார். மகிந்த ராஜபக்ஷவின் பிள்ளைகள் விமானம் மூலம் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடுகின்றனர். ராஜபக்ஷக்களின் வீடுகள் எரியூட்டப்படுகின்றன.

மகிந்தவின் தந்தையார் ராஜபக்ஷவின் சிலை இடித்து வீழ்த்தப்படுகிறது. ராஜபக்ஷ குடும்பத்தவர்களின் தலைகள் தெரிந்தால், அவ்வளவுதான் சங்காரம் நடந்து சங்கதி முடிந்திருக்கும்.

ஏன்? மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஓர் அன்பருக்கு மகா அபிஷேகம் நடத்தி, கவசனத்துடன் அவரை வீதி ஓரத்தில் விட்டு வைத்ததை யாரால் மறக்க முடியும்.

ஆம், இலங்கையின் வரலாற்றில் முன்பும் இல்லை. இனியும் இருக்கப் போவதில்லை என்று கூறுமளவுக்கு ராஜபக்ஷக்களுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டம் அமைந்தது.

நிலைமை இதுவாக இருக்கையில், அவை பற்றி எந்தக் கருசனையும் இல்லாமல் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கடந்த 21ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணியொன்று நடத்தப்பட்டது.

பேரணி வெற்றி பெற்றதா? என்ற கேள்வி தேவையற்றது.

குருசேத்திரப் போர் நடந்தபோது கௌரவர் பக்கத்திலும் ஆட்கள் இருந்தனர். அதுபோல சூரன் போரிலும் சூரனுக்கும் ஒரு பட்டாளம் இருந்தது.

ஆம், இந்த உலகம் தர்மம் – அதர்மம் என்ற இரண்டு பக்கங்களைக் கொண்டது.

ஆக, அநுரவின் அரசுக்கு எதிராக நாமல் ராஜபக்ஷ தலைமையில் எதிர்க்கட்சிகள் நடத்திய பேரணி பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

ஏனெனில் அந்தப் பேரணியால் எந்த விளைவும் ஏற்படப்போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

அதேநேரம் அநுர அரசு ஊழலுக்கும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இந்த நேரத்தில் அநுர அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்யாவிட்டால், முன்னைய ஆட்சியாளர்களுக்கும் ஊழலுக்கும் தொடர்பில்லை என்பது போன்ற கருத்து நிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடும்.

எனினும் அந்த நிலைக்கு குற்றம் இழைத்தவர்கள் அமைதியாய் இருக்கமாட்டார்கள்.

எனவே ஊழலுக்கு எதிராகவும் போதைப் பொருளுக்கு எதிராகவும் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மறைமுகமாக எதிர்க்கும் பொருட்டு எதிரணிகளைத் திரட்டிப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இங்குதான் பேரணியின் உள்நோக்கம் பற்றி நாம் நுணுகி ஆராய வேண்டும்.

ஆம், ஊழல் மற்றும் போதைப்பொருள் தொடர்பில் எங்களைக் கைது செய்தால், மக்கள் வீதியில் இறங்குவர் என்பதை அரசுக்கு சுட்டிக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டதே எதிரணியின் பேரணியாகும் என்பதுதாளன் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய விடயம்.

## உயர்தர மாணவர்களின் எதிர்காலத்துக்கு முட்டுக்கட்டையிடும் கட்டைக்காடு பேருந்து

### விமோசனம் கோறும் மக்கள்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற இ.போ.சபைக்கு சொந்தமான பேருந்து நேற்று சனிக்கிழமை (22) காலை 6.30 நாகர் கோவில் பகுதியில் பழுதடைந்ததால் உயர்தரப் பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

திடீர் பழுதால் அப் பேருந்தில் பயணித்த க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் மற்றும் வைத்திய சாலைக்குச் சென்றவர்கள் எனப் பலரும் நடுத் தெருவில் நிற்க வேண்டிய நிலையில் மாற்று பேருந்து மூலம் சேவை முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பயன்பாட்டில் இருக்கும் இ.போ.ச பேருந்து அண்மைக் காலமாக அடிக்கடி பழுதடைந்து வருவதால் உடனடியாகப் புதிய பேருந்தைச் சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்த போதும் உரியவர்கள் இதுவரை செவிசாய்க்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் பருத்தித்துறை மற்றும் மருதங்கேணிப் பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டங்களிலும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் இதுவரை பேருந்துகள் மாற்றப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இந்நிலையில் இது பரீட்சைக் காலம் ஆதலால் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கிழக்கு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-7,60)

## முச்சக்கர வண்டிக்குள் காயங்களுடன் சடலம்

### பொலிஸார் தீவிர விசாரணை

(மஹரகம)

மஹரகம - கம்மான வீதி, 4ஆவது ஒழுங்கைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றினுள் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் குருநாகல், கல்கமுவப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதான நபர் என அடையாளம்காணப் பட்டுள்ளது.

சடலத்தில் காணப்படும் காயங்கள் தொடர்பில் சந்தேகம் நிலவுகின்ற நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் மஹரகம பொலிஸார் துரித விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (ம-7)

## கரையோரப் புகையிரத மார்க்கத்தில் தடங்கல்

கரையோரப் புகையிரத மார்க்கத்திலான போக்குவரத்து நடவடிக்கைகள் வெலிகம வரை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகப் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 02.05 மணியளவில் மாத்தறையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த புகையிரம் ஒன்று கம்புருகமுவ மற்றும் வெலிகமப் புகையிரதம நிலையங்களுக்கிடையில் தடம் புரண்டுள்ளது.

குறித்த புகையிரதத்தை தடம் ஏற்றுவதற்கு பணிக்குழாமினர் நடவடிக்கை எடுத்த போதிலும் மீண்டும் அந்தப் புகையிரதம் தடம் புரண்டமையால் கரையோர மார்க்கத்திலான புகையிரதப் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த புகையிரதத்தை தடம் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## கொட்டித் தீர்க்கும் கனமழை

### ஜிங், நில்வள கங்கைகளில் வெள்ளம் ஏற்பட வாய்ப்பு

நாட்டின் மேல் மற்றும் மத்திய நீரேந்து பகுதிகளில் பெய்து வரும் தொடர் கடும் மழை காரணமாக ஜிங் மற்றும் நில்வள கங்கைகளின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதோடு வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் நிலவுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி,

ஜிங் கங்கையை அண்டிய நெலுவ, தவலம, நாகொட, நியாகம, வெலிவிட்டிய - திவிதுர, எல்பிட்டிய மற்றும் அக்மீமன ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் மற்றும் நில்வள கங்கையை அண்டி பஸ்கொட, கொட்டபொல, பிட்டபெத்தர, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, கம்புறுபிட்டிய மற்றும் திஹகொட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை நீர் மட்டம் அதிகரிப்பு காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 04 வான் கதவுகளும் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 02 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## சூட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேகநபர் கைது

### ஐஸ் போதைப்பொருளும் மீட்பு

கொட்டாஞ்சேனையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவியாக இருந்த நபரொருவரைக் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வேளை சந்தேக நபரிடமிருந்து 08 கிராம் 450 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பு குற்றப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் வத்தளையின் தெலங்கபாதப் பகுதியில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த நபர் தீவிர விசாரணைகளுக்குட் படுத்தப்பட்டுள்ள நிலையில் விசாரணையின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01 - 30, 2025



'மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்'

பொ.ஐங்கரநேசன், தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 20 ஆம் திகதி சனிக்கிழமை நிறைவடையவுள்ளது.

தினமும் காலை 7.30 மணிமுதல் 11 மணிவரையும் பின்னர் மாலை 4 மணிமுதல் 5 மணிவரையும் அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகள் நடைபெற்று எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்ப் பவனியும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 20 ஆம் திகதி சனிக்கிழமை ஹனுமத் ஜெயந்தி விழா நிறைவடையுமென ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (3)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு கொக்குவில் அருள்மிகு தம்பளை ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியதோடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு, பாற்காப்பு சாத்துதல் போன்றவற்றை மேற்கொள்ள முடியுமென கும்பாபிஷேக உபயகாரர்அறிவித்துள்ளனர். (3)

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100 ஆவது அவதார தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் 100 ஆவது அவதார தின விசேட நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் அதிகாலை 4.45 மணிமுதல் தொடர் நிகழ்வாக இரவு 7.15 மணிவரை நடைபெறவுள்ளது.

குறித்த காலை நிகழ்வில் இசை அர்ப்பணத்தில் பாட்டு - எ.கல்யாண் சரண், வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்- வி.வசந் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் சிறப்புரையினை யாழ்ப்பாணம் - இந்திய உயர்ஸ்தானிக துணைத்தூதுவர் ஸ்ரீ.சாய்முரளி வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மாலை இடம்பெறவுள்ள நிகழ்வில் சாயி ஆன்மிகக் கல்வி மாணவர்களால் "சாயி பாகவதம்" எனும் நாட்டிய நாடகமும் "சொன்னபடி செய்கிறோமா?" நடைபெறவுள்ளது. தொடர்ந்து நிகழ்வில் சிறப்புரையினை சத்தியசாயி பல்கலைக்கழக முன்னாள் மாணவன் ஸ்ரீ.கிருஸ்ணமூர்த்தி வெங்கடராமன் நிகழ்த்தவுள்ளார். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 100 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 180 | 220 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 250 | 200 |
| தக்காளி | 260 | 200 | 200 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 160 | 200 | 120 | 120 |
| கோவா | 200 | 150 | 200 | 250 | 180 |
| கரட் | 250 | 250 | 300 | 250 | 220 |
| பூசணி | 80 | 80 | 50 | 100 | 50 |
| புடோல் | 200 | 300 | 120 | 300 | -- |
| வாழைக்காய் | 50 | 70 | 50 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 220-350 | 200 | 350 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 150 | 200 | 180 |
| பாகற்காய் | 800 | 800 | 400 | 1200 | 700 |
| வெண்டக்காய் | 180 | 250 | 120 | 300 | 120 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 250 | -- |
| பயற்றங்காய் | 400 | 500 | 300 | 300 | 350 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 250 | 160 |
| பீற்றூட் | 250 | 180 | 120 | 200 | 180 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 800 | 400 | 800 | 800 |
| போஞ்சி | 600 | 600 | 400 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | 120 | 150 | 140 |
| கீரை - 1 பிடி | 120 | 60-140 | 80 | 200 | -- |
| தேசிக்காய் | 1200 | 1600 | 600 | 500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 150-200 | -- |
| இராசவள்ளி | 450 | 500 | 500 | 800 | -- |
| வெங்காயப்பூ | -- | 400 | -- | 600 | -- |
| முள்ளங்கி | 250 | 180 | 150 | 250 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 50 | 60 | -- |
| ஈரப்பலா | 150 | 100-150 | 120 | 150 | -- |

## வர்த்தகர்களை இணைக்கும் மாநாடு

(யாழ்ப்பாணம்)

உலக வர்த்தகர்களையும் தாயக வணிகர்களையும் இணைக்கும் வர்த்தகப்புரட்சி மாநாடு "வாணிபம் செய்வோம்!" எனும் கருப்பொருளில் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 2 மணிவரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச நாடுகளின் தூதரகங்கள், உலக வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் தாயக தொழில் முனைவோர் ஒன்றிணையும் இச் சந்திப்பில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (3)

## புதிய நிர்வாகத் தெரிவு

(வவுனியா)

வவுனியா இறம்பைக் குளம் மகளிர் வித்தியாலயத்தின் பழைய மாணவிகள் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி காலை 10 மணியளவில் பாடசாலையின் அக்குவைனஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பழைய மாணவிகள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் ஒத்துழைப்பினையும் வழங்குமாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (8-250)

## இராசிபலன்

23.11.2025,
கார்த்திகை 07 , ஞாயிற்றுக்கிழமை
திருதியை பிற்பகல் 5.54 மணிவரை

மூலம் முன்னரவு 6.42 மணிவரை
சுபநேரம் 9.11-10.41மணிவரை
இராகுகாலம் 4.41-6.11 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்**
வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**கடகம்**
பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**துலாம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மகரம்**
எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை

**ரிஷபம்**
மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**கும்பம்**
தொலைபேசி வழியில் தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு

**மிதுனம்**
நண்பர்கள் நம்பிக்கை குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்

**தனுசு**
குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது, எதிர்பாராத காரியங்கள் இடம்பெற்று இன்பம் தரும், உடல் நலனில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**
மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கூடும்,

தகுதியற்றவர்களை பார்த்து இரங்குவதே அது உனக்கு கேடு விளைவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் அட்டைப்...

பகுதியில் உள்ள தனது உறவினரின் வீட்டிற்குச் சென்றுள்ளார். இவரின் மாமனார் அட்டைப் பண்ணையை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் குறித்த இளைஞனும் வேறொருவரும் நேற்று முன்தினம் இரவு அட்டைப் பண்ணைக்கு காவலுக்குச் சென்றுள்ளனர்.

குறித்த இளைஞன் கடலில் இறங்கி சிறிது தூரம் சென்ற நிலையில் அவரை அலை இழுத்துச் சென்றதால் அவலக்குரல் எழுப்பினார். அவருடன் சேர்ந்து சென்றவருக்கும் நீச்சல் தெரியாத காரணத்தால் அவராலும் குறித்த இளைஞனைக் காப்பாற்ற முடியவில்லை.

பின்னர் ஊரவர்கள் இணைந்து, நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞனைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,33,60,104)

## உயிரிழந்தவர்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த முடியும்.

எமது அரசாங்கம் வர முன்பே மக்கள் இறந்தவர்களை நினைவுகூர்ந்தனர். அது அவர்களின் ஜனநாயக உரிமையாகவே காணப்பட்டது.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றது. இறந்த தங்களுடைய உறவினர்களைச் சுதந்திரமாக நினைவுகூர முடியும் பாதுகாப்புப் படையினரும் அதற்குத் தடையாக இருக்கமாட்டார்கள் எனத் தெரிவித்தார். (ம-7,316)

## கண்டியில்...

கண்டி, பஹல கடுகண்ணாவ பகுதியில் பிரதான வீதியோரத்தில் இருந்த வியாபார நிலையமொன்று மீது பாரிய கற்பாறையுடன் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 6 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் பாரிய பாறையொன்றுடன் மண்மேடு சரிந்தது. இதன்போது வீடும் உணவகமும் முற்றாகச் சேதமடைந்தன.

மண்ணுக்குள் சிக்குண்டவர்களில் ஒருவரின் சடலம் ஆரம்பத்தில் மீட்கப்பட்டது. மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மண்ணுக்குள் சிலர் புதையுண்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட நிலையில் 10 மணி நேர மீட்புப் பணியின்போது மேலும் ஐவர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கை நேற்று இரவு 7 மணியுடன் நிறுத்தப்பட்டது.

இராணுவம், தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கடும் மழை பெய்து வந்த நிலையிலேயே இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது. சம்பவத்தின்போது உணவகத்துக்குள் பலர் இருந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் எனத் தெரியவருகின்றது. (ம-7)

## நாடு...

எப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 611 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையில் 29,188 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 611 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 17 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம் கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 315 பேரும் திறந்த பிடியாணைகளுக்கமைய 154 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய 16 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 13 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4,496 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்ப்பாணத்தில்...

பெறவுள்ளது.

இந்நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த விழா கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த புதிய உள்ளக விளையாட்டு அரங்கம் யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு பெரும் உந்துசக்தியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## மழை...

சிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே மாகாணத்திற்கு அருகாக புதிய காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை ஒரு புயலாக வலுப்பெற்று மத்திய வங்காள விரிகுடாவின் ஊடாக நகர்ந்து எதிர்வரும் 01.12.2025 அன்று இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள பிரம்மபூர் பகுதிக்கு அண்மையாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இது இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு அருகாக நகரும் என எதிர்பார்க்கப்பட்டாலும் தற்போது இது கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு தொலைவாகவே நகரும் வாய்ப்புள்ளது. எனவே இந்தப் புயலினால் இலங்கையினுடைய எந்தப் பகுதிக்கும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு எந்தவிதமான நேரடியான பாதிப்பும் கிடையாது.

இந்தப் புயலினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 25.11.2025 முதல் 28.11.2025 வரை மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதேவேளை எதிர்வரும் 26.11.2025 மற்றும் 27.11.2025 காலப்பகுதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் சற்று அதிகமாகக் காணப்படும் என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.11.22 சீட்டிழுப்பு இலக்கம் 6021
P 5 1 3 3 7 9
அத சம்பத P 3 3 7 9 சீட்டிழுப்பு இலக்கம் 0596
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.22 சீட்டிழுப்பு இலக்கம் 8137
மீனம் 24 34 48 7191

தன நிதானய
திகதி - 2025.11.22 சீட்டிழுப்பு இலக்கம் - 2051
I 04 24 49 57 I

மெகா பவர்
திகதி 22/11/2025 சீட்டிழுப்பு இலக்கம் 2369
F 08 04 13 22 49

ஜய
திகதி 2025.11.22 சீட்டிழுப்பு இலக்கம் 0289
N 6 8 1 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4263 சீட்டிழுப்பு திகதி 22.11.2025
I 12 23 60 76
I

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2025.11.22 சீட்டிழுப்பு இலக்கம் 1330
துலாம் 25 41 51 54 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.11.2025 வெற்றி வாரம் 0729
D 1 0 3 3 3 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,227,692.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2995 சீட்டிழுப்பு திகதி 2025.11.22 தினம் சனிக்கிழமை
20 29 57 80 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,085,451.20

சனிதா
திகதி 22.11.2025 வெற்றி வாரம் 5156
02 17 61 77 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,831,494.00

சசிரி
வெற்றி வாரம் 825 சீட்டிழுப்பு திகதி 22.11.2025 சனிக்கிழமை
22 41 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4707 சீட்டிழுப்பு திகதி 22.11.2025 தினம் சனிக்கிழமை
10 13 22 45 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,152,198.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 04 07 08 41 47
சீட்டிழுப்பு வாரம் 2171 திகதி 22.11.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.609,081,544.60

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை வெற்றி வாரம் 2821 சீட்டிழுப்பு திகதி 2025.11.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,345,737.60
15 34 40 56 R
DLB DEVELOPMENT LOTTERIES BOARD

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# English Classes

- English Literature for Grade 10 and G.C.E O/L
- Spoken English
- Grammar classes
- English for job seekers
- English for University students and HNDE
- Literature for Degree students
- English for university Entrance students
- IELTS preparation



- Limited numbers (Five in a group)
- Individual attention
- Proven results
- Exam oriented techniques

Classes conducted by a highly experienced graduate teacher from government school and visiting lecturer at leading government tertiary institution.

Class commence on 05.12.2025

By : K.Jeyakumar B.A(English)
PGGE (TESL) Colombo univ.

Contact : 077 9074129

(5991)

# Typing Services

English, Tamil Typing & Add Creation

தனிநபர், கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றிற்கு

☑ Tutes ☑ ExamPaper ☑ Thesis ☑ Handouts
☑ Proof Reading



070 537 6940

(C-4399)

# BIOLOGY

- A/L 2026 Students -
- A/L 2025 Repeaters -

Zoom & Direct Classes

Model Exam & Paper Discussion
Theory & Past Paper Class
Revision Class

- இறுதிப் பரீட்சை வரை வகுப்புக்கள் நடைபெறும்.
- நேர்த்தியான நேரசூசி.

A/L 2027 மாணவர்களுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.

யாழ். ஆசான் S.Shivarangan 077 828 0900

(C-4398)

Uber

# Easy பணம் சம்பாதிக்க

இன்றே Uberல் இணையுங்கள்

uber பதிவு முற்றிலும் இலவசம்



இன்றே இணைய இப்போதே அழையுங்கள்.

0707 555 755
0705123125
0706123125

(C-343)

# வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

சித்தன்கேணி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான வீதியில் வட்டு கிழக்கு தாவளையில் பிரதான வீதியில் இருந்து 200m உட்புறமாக அமைந்துள்ள 6 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.

உமாகனேஸ் : 075 286 7707
( whatsapp - 0014168815244)
லலிதா இரத்தினசோதி : 077 372 6685

(6001)

# 22 உடன் விற்பனைக்கு 22

01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்பு காணியும்
02. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 30 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்
03. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 30 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட தனிக் கடையும்
04. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 16 பரப்பு காணியும்
05. யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்பு காணியும்
06. யாழ். மின்சார நிலைய வீதியில் 6 பரப்பு காணியும்
07. யாழ். மின்சார நிலைய வீதி, பழைய தபாற் கந்தோர் வீதியில் 6 பரப்பு காணியும்
08. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
09. யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
10. யாழ். பிறவுண் வீதியில் 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட ஒரு பரப்பு காணியும்
11. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

0777 232 535

(C-4393)

Alliance Française de Jaffna

# புதிய வகுப்பிற்கான பதிவுகள் ஆரம்பம்!

REGISTRATIONS FOR THE NEW CLASS ARE OPEN!

AllianceFrançaise
Jaffna – Sri Lanka



சுற்றுலாத்துறையினர், பல்கலைகழக மாணவர்கள், ஃப்ரெஞ்சு பேசும் நாடுகளுக்கு செல்வோர் பதிவுகளை மேற்கொள்ளவும்!

- ஃப்ரெஞ்சு மொழியை ஃப்ரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்!
- Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கிகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு ஃப்ரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே.

Alliance Française de Jaffna
யாழ் ஃப்ரெஞ்சு நட்புறவுக் கழகம்
17, KANDY ROAD, JAFFNA
(பஸ்ரியன் ஹொட்டல் அருகே),
(சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)

021 222 8093, 076 577 8093

(5941)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 224/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 258/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 10Kg |
| 1Kg றவை | - 285/= | Max 1Kg |
| 1Kg பொன்னி அரிசி | - 239/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 237/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 197/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 254/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பயறு | - 690/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 975/= | |
| 1Kg கறுப்பு கௌப்பி | - 1290/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= | ~~70~~ |



MAX 03 ~~1200~~ 1135 400g Anchor

~~320~~ 280 1Kg சன்லைட் பவுடர்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

(1731)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org